நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை, தோற்றம் 14.09.1901

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி: 110 பகுதி: 06 ஜூன்-2016

திருவள்ளுவர் ஆண்டு 2047

விலை: ரூ.10



வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

1867-1911



மன்னர் பாஸ்கர சேதுபதி

1868-1903

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

## தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி M.B.A., | தலைவர் |
| மருத்துவர் ந.சேதுராமன் M.S., M.Ch. (Uro), MNAMS. (Uro), FICS | துணைத் தலைவர் |
| வழக்குரைஞர் ச.மாரியப்ப முரளி M.A.,B.L., | செயலாளர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil., | உறுப்பினர் |
| முதுமுனைவர் இரா.இளங்குமரனார் | உறுப்பினர் |
| பொறியாளர் திரு. க.சி.அகமுடைநம்பி B.E., | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| வழக்குரைஞர் கே.ஆர்.என். கருணாகரன் M.B.A., M.L., | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| திரு. வி.சத்யநாராயணன் | உறுப்பினர் |
| திரு. துரை கருணாநிதி | உறுப்பினர் |
| வழக்குரைஞர் ச.தசரதராமன் B.A.,B.L., | உறுப்பினர் |

## செந்தமிழ்க் கல்லூரிக்குழு

| | |
|---|---|
| வழக்குரைஞர் ச.தசரதராமன் B.A.,B.L., | தலைவர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil., | செயலாளர் |
| வழக்குரைஞர் ச.மாரியப்ப முரளி M.A.,B.L., | உறுப்பினர் |
| திரு. து.மாயராசன் B.Sc., B.L., | உறுப்பினர் |
| திரு. சு.சிவசாமி B.A.,B.L., | உறுப்பினர் |
| பொறியாளர் க.சி.அகமுடைநம்பி B.E., | உறுப்பினர் |
| திரு. எல்.சிவக்குமார் B.E., | உறுப்பினர் |
| திரு. ஆர்.பாலாஜி | உறுப்பினர் |
| திரு. ஜெ.பாலதண்டாயுதம் | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| திரு. வி.சத்யநாராயணன் | உறுப்பினர் |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | இதழ் மணம் | 4 |
| 2. | கர்<br>இரா.இளங்குமரன் | 6 |
| 2. | தமிழைப் போற்றும் திருவள்ளுவர்<br>மறைமலை இலக்குவனார் | 13 |
| 3. | குறுக்குத்துறைக்குமரன் பிள்ளைத்தமிழ்<br>முனைவர் நெல்லை ந.சொக்கலிங்கம் | 15 |
| 4. | பட்டினப்பாலை கூறும் வணிகத் தொடர்புகள்<br>பேராசிரியர் முனைவர் இ.கி.இராமசாமி | 25 |
| 5. | நற்றிணையில் நீர்வளங்கள்<br>முனைவர் வி.காந்திமதி | 34 |
| 6. | சங்கச் செய்திகள் | 39 |

# இதழ் மணம்

"மொழிப் பொருட் காரணம் விழிப்பத்தோன்றா" என்பது தொல்காப்பியம். தமிழறிஞர் இரா.இளங்குமரனார் தமிழ் மொழியின் வேர்ச் சொற்களை நுண்ணிதின் ஆய்ந்து மொழிப்பொருளை விளக்கும் திறம் கற்று இன்புறத்தக்கது. மொழியின் ஒலிப்பு, ஓசை இவற்றின் நுண் பொருட்களையும் தெள்ளின் எடுத்துக்காட்டி, கவிதையில் சொல் வழங்கும் பொருட் சிறப்பு சார்ந்த ஆய்வு நெறியை (semantics) முறை வழி உணர்த்தும் பாங்கு மொழிநூல் வல்லார் கூறும் நெறி, ஆய்வுக்குப் பெருந்துணையாகும். இலக்கியங்களில் பயின்றுவரும் சொற்றொடர்களை ஆசிரியர் எடுத்து விளக்கும் செவ்வியல் ஆய்வுப் பார்வை மாணவர்கள் கற்றுணர்வதற்கும் ஆய்விற்கும் பெரும் பயன் விளைப்பதாகும். இவையனைத்தும் இப்பெரியாரின் கல்வி நலம் சார்ந்த சிறப்பு எனலாம். இதற்கு அப்பால் மானிடவியல் கூறுகளையும் வாழ்வு நெறியையும் புலப்படுத்தும் திறம் அறிவுக்கு இன்பம் பயப்பதாகும்.

"காளை" என்னும் சொல்லை விளக்கும்போது "கருமைக்கு வலிமைப் பொருள் உள்ளமை முன்னரே சொல்லப்பட்டது. இயற்கையோடு போராடி அதனை வென்றும் தோற்றும் வறுமையில் உழன்றும் வாழ்ந்தவர் நிறம் கருமையாய் அமையும். அதே பொழுதில் வலிமையும் உடனாகி நிற்கும்." "வலியுறா ஒருவர் வலிமையர் ஆகார்" எனப் பொருள் பொதிந்த உண்மையை உணர்த்தும் திறம் வாழ்க்கை நெறியாகும். கல்வி என்பது பொருள் ஈட்டுவதற்குரியது மட்டும் அல்ல; வாழ்க்கை நெறியைப் புரிந்து வாழ்வதுமாகும். அவ்வகையில் ஆசிரியர் சொற்களை விளக்குவதோடு நிற்காது இயற்கையோடு போராடிய வாழ்க்கையையும் இயற்கைப் போராட்டத்தையும் இயற்கை தரும் இன்ப துன்பங்களையும் எதிர்கொள்ளும் அறிவும் ஆளுமையும் அதனைப்போற்றி வாழும் திறமும் அவருடைய எழுத்தின் மையமாக இருப்பதை வாசகர்கள் உணர்தல், கற்கும் கல்விக்கு வளம் சேர்ப்பதாக அமையும். அவ்வகையில் அறிஞர் இரா.இளங்குமரனாரின் எழுத்துக்கள் எண்ணிப்படிக்க வேண்டிய பேசும் படம் எனலாம்.

குறுக்குத்துறைக்குமரன் பிள்ளைத் தமிழ்: இந்நூல் நெல்லை நகர்ப் புலவர் தி.சு.ஆறுமுகனார் முருகக் கடவுள் மீது பாடிய சிற்றிலக்கிய வகையுள் ஒன்று. இப்புலவர் பெருமகனாரை கௌமாரமடம் சுந்தர சுவாமிகள் "கற்றபுலவர், கவிவல்லார், நற்றகைமை ஆறுமுகனார்" என்று பாராட்டிக்கவிபாடியுள்ளார்.

இப்பிள்ளைத்தமிழ் குறித்துப் பேராசிரியர் நெல்லை ந.சொக்கலிங்கம் அவர்களுடைய கட்டுரை படித்து இன்புறத்தக்கது. தமிழகத்தில் தண் பொருநையாறு என்றும் நீர் வளம் சிறந்து வற்றாத ஆற்றுநீர் வளம் உடைய சிறப்பிற்குரியது. தமிழகத்தில் பிற பகுதிகளில் உள்ள ஆறுகளும் குன்றுகளும், குளங்களும் அழிக்கப்பட்டு உயிர்அற்று இயற்கை அழிந்தநிலையை அடைந்து வருகின்றன. அப்பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் "தமிழ்வாழ்க! தமிழ்நாடு வாழ்க!" என்று வாய்கிழியப் பேசினும் சொந்த மண்ணின் மணத்தைப்பேணும் அறிவற்ற மூடர்களாக உள்ளநிலையில், நெல்லை வாழ்மக்கள் தங்கள் ஆறுகளையும் மண்ணையும் மலை வளத்தையும் இயற்கைச் செல்வத்தையும்

போராடி மீட்டு உயிர்ப்போடு வாழ்ந்து வருகின்றனர். தமிழகத்து மற்றையாறுகளெல்லாம் வரண்டு வாழ்வற்றுக் கிடக்கிறது. தண்பொருநையாறு தன் இயல்பு குன்றாத வளம் கொழிக்கிறது. அதற்குக்காரணம் அங்கு வாழும் மக்களும் அறிஞர் பெருமக்களும் இயற்கையின் அருமை அறிந்த பெருமக்களாவார்.

குறுக்குத்துறைக் குமரனைப் போற்றும் ஆசிரியர் இயற்கையை போற்றும் அழகு கவிதைக்கு வண்ணம் சேர்த்துள்ளது. "எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே" (புறம்.187) என்ற பழம்பாடல் நெல்லை மண்ணுக்கும் மக்களுக்கும் மிகவும் பொருந்தும்.

"பொதிகைப் பொருப்பிலிருந்து குதித்திறங்கிப் புனஞ்சேர் குறிஞ்சி வளம் பெருக்கி வியனார் முல்லை வளங்கொண்டு விளைசெய்மருதம் புகுந்துலவி விரிந்தே தேங்கி நெல்விளைத்து" நெய்தலில் கலப்பதை கவிஞர் பாடி மகிழ்வது நூல் முழுவதையும் கற்கவேண்டும் என்னும் ஆவலைத் தூண்டுகிறது. இத்தகைய அரிய நூலை வாசகர்களுக்கு விரித்துரைத்து அறிமுகம் செய்யும் பேராசிரியர் ந.சொக்கலிங்கம் நம்முடைய அன்புக்கும் பாராட்டுக்கும் உரியவர்; அவர்கள் இதுபோல பல அரியதமிழ்ச் செல்வங்களை இனம் கண்டு மாணவர்களுக்கு அறிமுகம் செய்யும் அரும் கல்வி வித்தகர்; அவர்கள் வண்ணச் சரபம் பணியில் தண்டபாணி சுவாமிகள் இலக்கியம் குறித்து ஆய்வுநூல் வெளியிட்டுள்ளார்கள்.

பேராசிரியர் இ.கி.இராமசாமி அவர்களுடைய பட்டினப்பாலை குறித்த கட்டுரை இவ்விதழில் இடம்பெறுகிறது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மக்கள், உலகின் பிறபகுதி மக்களோடு கொண்டுள்ள வாணிகத்தொடர்புகளை விளக்கும் நயம் இன்புறத்தக்கது. இனிய செய்திகள் இன்பம் தரும்.

"புண்ணியம் முட்டாத் தண்நிழல் வாழ்க்கை" எனச் சோழவள நாட்டுத் தலைநகர் பூம்புகாரின் மக்களுடைய வாழ்க்கையைக் குறிப்பிடுகிறார் பட்டினப்பாலை ஆசிரியர். இனிய மன உணர்வோடு அறத்தொழில்கள் முட்டுப்படாத குளிர்ந்த அருளுடனே வாழும் இல்வாழ்க்கையையுடைய நன்னெஞ்சினோர் என்று உரையாசிரியர் விளக்கம் அளிப்பது அந்த மக்களுடைய அருளும் பொருளும் நிறைந்த வாழ்வை விளக்குவதாகும். தண்சாயல் நிறைந்த அருள்நெறி என்பது உலக வாழ்வை மாண்புறச் செய்வது; உலகியற் பொருளை ஈட்டுவதன் நோக்கம் மக்கள் அனைவருக்கும் அத்தகைய தண் நிழல் வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்வதற்கேயாகும். உயர்ந்த நெறிசார்ந்த வாழ்க்கை காவிரிப் பூம்பட்டினத்தில் நடைமுறையில் இருந்ததால் "மொழி பல பெருகிய பழிதீர் தேயத்து புலம்பெயர் மாக்கள் கலந்து இனிது வாழ்ந்தனர்" என்னும் கூற்று பண்டைய மக்களின் நனி நாகரிகத்தைக் காட்டுவதாகும். மக்களுடைய மனவளர்ச்சிக்கு ஏற்பவே அந்த நாட்டின் மக்கள் வாழ்க்கைத்தரம் உயரும் என்பது இன்று உலகம் எங்கும் காணப்படும் உண்மையாகும். பொருள் குறித்த ஆய்வுகள் நடப்பதுபோல மனவளர்ச்சி குறித்த உளவியல் ஆய்வுகள் உலகமெங்கும் நடந்துகொண்டிருக்கிறது. பண்டைத்தமிழ் மக்கள் செல்வச்செழிப்போடு நனிநாகரிகம் உடையவர்களாகவும் விளங்கினர் என்பது பட்டினப்பாலைச் செய்தியாகும்.

# கர்

முதுமுனைவர் **இரா.இளங்குமரன்**

**கர்** - என்பதோர் அடிச்சொல்; அது கருமைப் பொருளது.

**கர் கர்** - ஓர் ஓசைக் குறிப்பு; இரும்பை இரும்பால் அறுக்கும் போதும், கூராக்கும் போதும் உண்டாகும் ஓசை. குரல்வளை வழி வருவதே ஒலி.

**கரகம்** - தண்ணீர்க்குடம் (எ-டு) கரகத்தில் தண்ணீர் குடியாராய் நெடுநல்.65. நச். கரிய மண்குடம்.

**கரடம்** - கருநிறமுடைய காகம் (சூடாமணி நிகண்டு)

**கரடி** - கருநிறமுடைய காட்டு விலங்கு; வளைந்த அடியினையுடைய கரடி (திருமுரு.313 நச்)

**கரடிகை** - கரடி ஒலிப்பது போல இசைக்கும் ஓர் இசைக்கருவி.
"பேரிகை மத்தளம் சல்லிகை கரடிகை"

**கரடு** - கருநிறப் பொற்றை (பாறை)
கணுக்காலின் கரிய முட்டெலும்பு; கரண்டை, கரண்டகம் என்பதும் அது.
'கரடு முரடு' இணைச்சொல்.

**கரட்டான்** - கரடு போலும் நிறமும் சொரசொரப்பும் அமைந்த ஊரும் உயிரி.

**கரண்டி** - கரிய இரும்பால் வடிக்கப்பட்ட அகப்பை; அப்பெயர் மற்றை மாழை (உலோகம்)களால் ஆக்கப்பட்டதற்கும் ஆகியது. மரத்தால் ஆக்கப்பட்டனவும் இளகியத்தால் (பிளாசுடிக்) ஆக்கப்பட்டனவும் உண்டு. செல்வப்பேற்றின் சான்றாகப் பொற்கலங்கள், வெள்ளிக் கலங்கள் உள்ளபோது கரண்டியும் அவற்றில் வாராவா?

**கரண்டிகை**- இரும்பால் ஆகிய பூப்பேழை.

**கரணம்** - திருமணம் முதலிய குடும்பச் சடங்கு; குட நீராட்டுவழி நிகழ்வது. களவு வாழ்க்கை கற்பு வாழ்வாய், இல்லறச் சீர்மையாய்ச் சிறக்க வேண்டும்; எக்களவும், கற்பாகாமல் போகக் கூடாது என்பதற்காக, 'நெஞ்சங்கலந்த நேயரை'ப் பொதுக் கடமை செய்தே பழக்கப்பட்ட முதுமகளிர் நால்வர், புதிய மட்குடங்களில் நீர் எடுத்து வந்து மணமக்களை நீராடச் செய்து,

> ***"கற்பினின் வழாஅ நற்பல உதவிப்***
> ***பெற்றோன் பெட்கும் பிணையை ஆக"***

என வாழ்த்தியமை திருமணக் கரணமாம் (அகம்.86).
சுட்ட கரிய மண்பானையில் சடங்கு நீர் கொணர்ந்து நீராட்டுதலால் 'கரணம்' எனப்பட்டது.

> ***"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்***
> ***ஐயர் யாத்தனர் கரணம் என்ப"***

என்பது தொல்காப்பியம் (1091)

ஐயர், என்பார் ஒரு சாதியர் அல்லர்; அந்தணர் என்பாரும் சாதியர் அல்லர். நந்தனாரும் கண்ணப்பரும் திருநீலகண்டப்பாணரும் சேக்கிழாரால் ஐயர் எனப்படுகின்றனரே!

*"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்*
*செந்தண்மை பூண்டொழுக லான்"*

என 'அகந் தண்ணியர்' எவரோ அவர் அந்தணர் என்கிறாரே, "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற செந்நாப்புலவர்! (திருக்.972).

**கரணர்** - திருமணம் முதலாம் சடங்குகள் நடத்துபவர்; கரணகர் என்பாரும் இவர்.

**கரணியம்** - காரணம்; புதிதாகப் பாவாணரால் படைக்கப்பட்ட சொல். செய்யத்தக்கது என்பது பழம்பொருள்.

**கரணை** - கருநிறத்தோலும் கரகரப்பும் உடைய கிழங்கு, அதனைக் 'கருணைக் கிழங்கு' எனல் பிழை.

**கரத்தல்** - வெளிப்படத் தோன்றாமல் மறைத்தல்
"நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்" (மூதுரை.25)
"அகல் வானத்து வெயில் கரப்பவும்" (மதுரைக் காஞ்சி.50)

**கரந்துபடை** - சுரங்கம்; புறத்தே இருப்பார் காணா வகையில் மண்ணுள் தோண்டிக் குடைந்த நடைவழி. (மணிமேகலை).
கண்வாயில் இருந்து வெளிப்படாமல் நீரோடும் மடை.
கண்வாய்; 'கம்மா' எனல் மக்கள் வழக்கு.

**கரந்து வரல் எழினி:**
கூத்து-நாடகம் - ஆடும் மேடைத் திரைவகைகளுள் ஒன்று. ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்து வரல் எழினி என்பன அவை.
ஒரு பக்கமாக இழுக்கும் திரை; இருபக்கமும் இணைந்து ஊடே பொருந்தும் திரை; உள்ளே நிகழ்வன வெளிப்படத் தெரியாமல் திரை மறைவில் நிகழ்வதாகக் காட்டுவது என்பவை அவை.

**கரந்துறை கோள்:** வெளிப்பாடு இல்லாமல் மறைவாக இருக்கும் கோள். கதிர் ஒளியைக் கொண்டு ஒளி செய்வதால் '**கோள்**' எனப்பட்டது. நாள் - கதிரோன்.
"நாளும் கோளும்" மக்கள் வழக்கு.

**கரந்துறைப்பா:** ஒரு பாடலில் ஒவ்வோர் எழுத்தை இடைவிட்டுப் படிக்க அது வேறொரு பாவாக மறைத்துச் செய்யப்படும் சித்திரப்பா.
செத்திரம் › சித்திரம். செத்து - போல.
"அரிசெத்து உணங்கிய பெருஞ் செந்நெல்" –பெரும்பாண் 473.
"நிறத்தால் ஞாயிற்றை ஒத்து உலர்ந்த பெரிய செந்நெல்" - நச்.

**கரந்தை:** கரு நிறப் பூவையுடையதோர் பூண்டு.
இது கொட்டைக் கரந்தை எனவும் வழங்கும்.
வெட்சிப்பூ அணிந்த மறவர் கவர்ந்த பசுக்களை, கரந்தைப்பூ அணிந்த மறவர் மீட்டிச் செல்லல் கரந்தை. "மீட்டல் கரந்தை"

என்பது புறத்திணை இலக்கணம். பூநிறம் கருப்பு; களவும் கரவும் ஒன்றே; இரவில் - இருளில் - நிகழும் நிகழ்வு! எல்லாமும் கருமையும் இருண்மையும் ஆம். 'இரு' என்பதும் கருமைப் பொருளதே. (எ-டு). இருள், இருட்டு, இரவு, இரும்பு.

**கரப்பான் பூச்சி:** கருநிறப் பூச்சி இது. கரப்பான் என்பது ஒரு நோயுமாம். அது, உமிக் கரப்பான், ஊது கரப்பான், கண்டக் கரப்பான், கொள்ளிக் கரப்பான், செங்கரப்பான், மண்டைக் கரப்பான் எனப் பலவகையாம். (கதிரை வேலர் - அகராதி).

**கரப்பு** - கரவட நெஞ்சம் (அ) வஞ்ச மனம்

*"கரப்பில் உள்ளமொடு"* புறம் (34).

கரப்பில் உள்ளம் - மறைத்தல் இல்லாத உள்ளம். பழையவுரை.

**கரபம்** - யானை; கருநிறத்தது; கரபி கரமை என்பவும் அது.

**கரம்பை** - கருநிற மண் நிலம்; கரிசல் என்பதும் அது.

*"கரம்பைச் சீறூர் நல்கினள் எனவே" (புறம்.285)*

*"நிரம்பா இயல்பில் கரம்பைச் சீறூர்" (புறம்.302)*

சீறூர்-சிற்றூர்; சீறடி என்பது சிறிய அடி என்பதுபோல.

**கரவு** - வஞ்சம், மறைவாகச் செய்யப்படுவது

**கரளம்** - கருநிற நஞ்சு.

**கரா** - கருநிற முதலை வகையுள் ஒன்று.

*"ஒடுங்கிருங் குட்டத்து அருஞ்சுழி வழங்கும்*
*கொடுந்தாள் முதலையும் இடங்கரும் கராமும்"*

*குறிஞ்சிப்பாட்டு: 256-57.*

முதலை, இடங்கர், கரா என்பவை முதலை இனம்.

**கரி** - அடுப்புக்கரி, வயிரம், மிளகு, நஞ்சு, கருநிறயானை; கரிணி - பெண்யானை; கரிமுக அம்பி - படகு வகை, - சிலப்பதிகாரம், வெளிப்படத் தெரியாத சான்று; எ-டு "இந்திரனே சாலுங்கரி" குறள்.25

**கரிக்குருவி-** வால் நீண்ட கருநிறக்குருவி.

"வால் நீண்ட கரிக்குருவி வலமிருந்து இடம்போனால் கால் நடையாய்ப் போனவர்கள் கனக தண்டி ஏறுவார்கள்" என்பது சொகின (சகுன) நம்பிக்கையர் கதைப்பு. கனக தண்டி - பொற் சிவிகை. கரிச்சான் என்பதும் இது.

**கரிகால் வளவன்**

கரிகளுக்குக் காலனாக விளங்கிய மாவீரன்! பகைவரால் கரிந்த காலையுடையவன் என்பதும் முன்னவர் கருத்து.

**கரிசல்** - கருமண் நிலம், கரம்பை,

**கரிசலாங்கண்ணி:** கரிச்சான்பூடு, கரிசாலை, கரிப்பான், கையாந்தகரை என்பனவும் இதுவே.

இலை பசுமையாக இருந்தாலும் இதன் சாறு காய்ந்தால் கருமையாகிவிடும்.

கள்ளிப்பால் வெள்ளைதான், காய்ந்தால் கருமையாகிவிடும். **கண்ணி** என்பது அதன் இலைகள் கண்களைப் போல் நேருக்கு நேராக அமைந்தது என்பதாம். பொன்னாங்கண்ணி என்பதை ஒப்புநோக்குக

**கரிதல்** - கருகிப்போதல்; எரிந்துபடலால் கருநிறமாதல்.

**கரிபவழம்** - கரு நிறமானதும், வீக்கத்திற்கு அப்பிக்கட்டுவதுமாம் செய் மருந்து... **கரிய பவழம்** என்பதும் இது.

**கரிமா** - கருநிறம் அமைந்த விலங்காகிய யானை.

**கரியன்** - கருநிறத்தவன்; கண்ணன்; கரிய மாணிக்கம் என்பதும் கண்ணன் பெயரே; அவன் கோயில் கொண்ட ஊர்ப்பெயரும் அது. கரியமால் என்பதும் கண்ணனே.

**கருகல்** - கருநிறமாகிப் போதல்; மிகுவெப்பாலோ, தீவாட்டலாலோ, கருநிறம் கொள்ளல், **கருக்கல்** - கருநிறமாகச்செய்தல், இருள் பொழுது.

**கருங்கலம்**- கருநிற மண்பாண்டம்

**கருங்காலி**- கரிய அடியையும் வலிமையையும் கொண்ட ஒருவகை மரம். "கருங்காலிக் கட்டைக்கு வாய்நாணாக் கோடரி" - ஔவை, தனிப்பாடல்.

கருங்குரங்கு, கருங்குவளை, கருங்கோழி, கருஞ்சாந்து, கருஞ்சாரை, கருஞ்சீரகம், கருந்துளசி முதலியவை கருவண்ணத்தால் பெயர் பெற்றவை.

**கருடன்** - கருநிறப் பெரும் பறவை, பெரிய உருவால் பருந்து எனப்பட்டது. கண்ணில் நீர்வழிவதுபோல் தோன்றும் தோற்றத்தால் கலுழன் எனப்பட்டது. கலுழ்தல் - அழுதல், திருமால் ஊர்தியாம் தொன்மம் 'கருடாழ்வார்' ஆக்கியது.

**கருப்பு** - அச்சக்குறி; **"ஓராளும் கருப்புடையும் பேய்"** - பாவேந்தர் - பாண்டியன் பரிசு.

**கரும்பு** - கருநிறமும் செம்மையும் கலந்த ஓரறிவுப் பயிர்.

"கார்க் கரும்பின் கமழாலை" பட்டினப்பாலை.

பண்டே கரும்பு ஆலை இருந்த சான்று; வானவர் நாடாம் (வானளாவிய மலைநாடு) சேர நாட்டில் இருந்து அதியமான் முன்னோரால் சோழநாட்டுக்குக் கொண்டு வரப்பட்டது என்பது வரலாறு. பின்னே வந்தவை வெள்ளைக் கரும்பு, இராமக் கரும்பு என்பவை.

கரும்பில் இருந்து எடுக்கப்பட்டது **கருப்புக்கட்டி**.

பனையின் சாற்றைக் காய்ச்சி எடுக்கப்பட்டது **பனாட்டு**.

சீனத்தில் இருந்து வந்தது ***'சீனி'***. ***சீனவேட்டு***, ***சீனக்காரம்*** என்பனவும் அங்கிருந்து வந்தனவே.

**கரும்பிள்ளை**- காகம்

**கருவுறல்** - கருக்கொள்ளல். கருவாகியதும் ஆகாமையும் உடன் அறியவராமல் இருந்து, பின்னே பிற குறிகளின் வழியே

அறியப்பெறுவது. கருப்பம் என்பதும் அது.

**கருவூலம்** - கருமாரால் வடிக்கப்பட்ட 'காசு' வைப்பகம்.

**கருவேல்** - முள்மர வகையுள் முற்பட்டது. பின்னே வந்தவை வெள்வேல், ஒட்டடை, உடை, சடை வேல்கள். வேலிக்கு முள்ளை நட்டமையால் 'வேல்' எனப்பட்டது. பகை நாட்டவர் வேல்களை அரணாக நட்ட பழ வரலாற்று வழியது 'வேலி' யாம்.

வேல்நட்டு வழிபட்ட இடங்களே **'படைவீடுகள்'** எனப்பட்டன. பின்னே வேலைப்பிடிக்க வைக்கப்பட்டவன் **வேலன் ஆனான்!**

**'கர்'** - என்பது 'கல்' ஆகியும் அப்பொருள் தரும்.

கல் என்பது கருநிறக் கல்லையும், மலையையும், மலைசார் ஊரையும் குறித்தது. பின்னே வெள்ளை, சிவப்பு முதலிய நிறங்களைக் குறித்தது.

**'கல்' எனக் கரைந்து வீழும்**
***கடும்புனல் குழவி"***

என்பதால், ஓசைக்குறிப்புவழிவந்த பெயர் என அறியலாம்.

**'கன்'** என மாறிக் கருமார் என்னும் கொல்லு வேலையர் **கன்னார்** என ஆயினர். அவர்கள் தொழில்வகையில் ஐவகைப்பட்டனர். மரத்தச்சர், கல் தச்சர், இரும்பு, செம்பு, பொன் வேலை செய்பவர் என்பவர் அவர்.

**'கருங்கைக் கொல்லர்'** என்பதில் வரும் கருமை **வண்ணப்** பொருளது அன்று; **வலிமைப்** பொருளது.

**கர்** என்பது 'கள்' என ஆகிக் கருமைப் பொருள்தரும்.

'கள்' என்னும் குடிப்பு களிப்பை ஆக்கி அறிவைமயக்கும்

**களவு, கள்ளம், களங்கம்** என்பனவும் இருண்மைப் பொருள் தருவனவே.

காக்கையிற் கரியது **'களாம்'** என்பதால் 'களா'வின் கருமை புலப்படும்.

**களஞ்சியம்**- களத்தில் இருந்து வந்த தவசச் சேமிப்பகம்; களம் கல்போல் கெட்டிப்பட்ட தளம்.

**கள்ளி** என்னும் சிறுதூறு பசுமையானது. அதன்பாலோ வெண்மையானது. அப் பால் காய்ந்தால் - 'கன்னங்கறேல்' என இருக்கும். அதனால் 'கள்ளி' எனப் பெயரிட்டனர்.

***"பால்நிறை பொத்தைக் கள்ளியைப்***
***பையல் ஒருவன் கல்லால் அடித்தான்;***
***கைம்மை வடிக்கும் கண்ணீ ராக***
***வழிந்தது சொட்டுச் சொட்டாய்ப் பாலே"***

இனிக் 'கர்' - 'கார்' ஆகிக் கொழிக்கும் சொல்வளம் காண்போம்.

**கார்** - கார் காலம், கருமுகில், காளமேகம் முற்படநிற்கும் கார், கரு, காளம் என்னும் மூன்றும் கருமைப் பொருளவே.

'காலம்' என்றாலே கார்காலத்தையே குறிக்கும். எ-டு: காலச்

சோளம், காலப் பருத்தி. இவை கார் காலத்தில் பயிரிடப்படுபவை. கார் காலம், 'தற்காலம்' என்று இலக்கிய வழக்கிலும், மக்கள் வழக்கிலும் வழங்கப்படும். தற்போது என்பதுவும் தற்சமயம் என்பதுவும் அதுவே. பொருளறிய வாராமல் வழங்கப் படுகின்றன.

*"தற்பாடிய தளிஉணவின் புள்"*

என்பது பட்டினப்பாலை. வானம்பாடிப் பறவை. 'தன்' மழைநீர். 'தற்பூசுணை' - தண்ணீர்மிக்க காய்க்கு வழங்குதல் நல்ல தமிழ். அதனைத் 'தற்பூசு' என வழங்குகின்றனர்.

*"காரே கூதிர் முன்பனி பின்பனி*
*சீரிள வேனில் வேனில்"*

என்பன அறுவகைப் பருவங்கள். பருவம் என்பது இரண்டு திங்கள் கால அளவு.

*"காரும் மாலையும் முல்லை' குறிஞ்சி*
*கூதிர் யாமம் என்மனார் புலவர்"* என்பது தொல்காப்பியம்!

கார் வந்ததா? "கணவன் செயல்முடித்துத் தேரில் வருதலை நோக்கி இருப்பள் தலைவி" என்பது அகப்பொருள். கார் என்பதற்கு அறியாமை (காரறிவு) என்னும் பொருளும் உண்டு. (திருக்.287).

காராடு, காரெலி, கார்க்கரும்பு, காரான், காரிருள் என்பனவும் கருமை வழிப்பட்டவையே.

காராடின் பின்னர் வந்தது வெள்ளையாடு.

எலி என்பது 'எல்' (ஒளி, ஒளி, கதிர்) வழிவந்தது. அது வெள்ளெலி. பின்னே தோன்றியவை காரெலி, பேரெலி (பெருச்சாளி, பொண்டான்) என்பவை.

**கார் கோள்-** கரும்பாம்பு எனப்படும் இராகு.

**கார்த்திகை-** மழைபொழியும் திங்கள். மாரி (மழை) கழிந்த நாள், மார்கழி.
"ஐப்பசி கார்த்திகை அடைமழை"

**காராளர் -** உழவர்; மழையால் தொழில்புரிந்து வேளாண்மை புரிவார்.

**காரான் -** காரெருமை - செங்கட்காரான் (சிலப்).

**காரி -** கருநிறக்காளை, களர் (கரு) நிலம், கருங்குதிரை, காரிக் கிழமை (சனிக்கிழமை), கருநிற மிளகு, மலையமான் திருமுடிக் காரி என்னும் வள்ளல். கரிக்குருவி, காகம்.

**காரியம் -** மழையால் செய்யப்படும் செயல்கள்.
மாரி அல்லது காரியம் இல்லை.
கார்+ இயம் = காரியம். அதன் அடிப்படையாம் முகிலே 'காரணம்'.
கார்+அணம் = காரணம். அணம் பொருந்துதல், மேல் எழுதல்.

**காருகம் -** உழவுத்தொழில்

**காரேறு -** கரிய கடா; "காரேறு பொருத" பெரும்பாண்.210.

**காரோடர்** - கட்டளைக்கல்லால் - அரக்குக் கல்லால் - பொன்மாற்றுக் காண்பவர்.

**காலன்** - கரியன், கூற்றுவன்.

**காலிகம்** - கரி

**காலிகை** - கருமை, கள், காக்கை

**காழ்** - வயிரம், குற்றம், கெட்டித்தன்மை **"காழில்கனி"** திருக்குறள். அகக்காழ், புறக்காழ்- தொல்.

**காழகம்** - கருமை, கருமண் அமைந்த நாடு - காழகம் (கடாரம்) 'கட்டாக்' என வழங்குகிறது.

**காள்** - கருமை

**காளம்** - கருமை, நஞ்சுடைய பாம்பு, கருமுகில்

**காளன்** - கரியன், வஞ்சன்.

**காளான்** - வெண்ணிறத் தோற்றம் தரினும் அன்றே கருத்துப் போவது; காளாம்பி என்பதும் அது.

காளான்வகை: அவற்காளான், கடற்காளான், குடைக்காளான், நகக்காளான், நிலக்காளான், புற்றுக்காளான், பேய்க்காளான், மரக்காளான், மஞ்சட்காளான் முதலியவை.

**காளி** - கரியவள்

**காளிமம்** - கருமை

**காளிமை** - கருமை

**காளை** - கரிய வலிய மாட்டைக் குறித்து, பின்னே காரி, புல்லை, மயிலை, வெள்ளை, செவலை எனக்குறிக்கப்பட்டது.

முல்லைக் கலியில் பல்வகைக் காளை வண்ணப்பெயர்களைக் காணலாம்.

கருமைக்கு வலிமைப் பொருள் உள்ளமை முன்னரே சொல்லப் பட்டது. இயற்கையொடு போராடி அதனை வென்றும் தோற்றும் வறுமையில் உழன்றும் வாழ்ந்தவர் நிறம் கருமையாய் அமையும்; அதேபொழுதில் வலிமையும் உடனாகி நிற்கும்.

"வலியுறா ஒருவர் வலிமையர் ஆகார்"

"சுடுபடா ஒருவர் சுடர்விட மாட்டார்"

# தமிழைப் போற்றும் திருவள்ளுவர்

**மறைமலை இலக்குவனார்**
மேனாள் சிறப்பு வருகைப் பேராசிரியர்
கலிபோர்னியா பல்கலைக்கழகம்,
தமிழ்ப் பேராசிரியர் (பணிநிறைவு),
மாநிலக் கல்லூரி, சென்னை.

*'அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி*
*பகவன் முதற்றே உலகு'*

என்னும் முதற்குறள் பல்வேறு சிந்தனைகளைத் தோற்றுவிக்கும் ஆற்றல் வாய்ந்ததாக விளங்குகிறது. இக்குறளுக்கு உரைகண்ட பெரும்புலவர் கா.சு.பிள்ளை அவர்கள் அகர ஒலியின் பிறப்பை விளக்குகிறார். 'எல்லா எழுத்துகளையும் ஒலிக்கத் தொடங்குமுன் அகரமானது வாய் திறந்தவுடன் உண்டாய்விடும். அந்த அகரம் ஒலியாதபோது நுட்ப அகரமெனப் படும். இந்த நுட்ப அகரம் பிற எழுத்தொலிகள் எழுவதற்கு அடிப்படையாய் அமைந்துள்ளது. ஆகவே இது எழுத்தொலிகளுக்கெல்லாம் காரணம் எனப்படும்' என்று கா.சு.பிள்ளை கூறுகிறார். எனவே 'எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக உடையன, அதுபோல உயிர்கள் யாவும் கடவுளை முதலாக உடையன' என்பது அவர் கருத்து.

வள்ளுவர் தமது கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் எந்தக் கடவுளையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. எனினும் இக்குறளுக்கு உரை கண்ட கா.சு.பிள்ளையவர்கள் மாதொருபாகனாகிய கடவுள் என்கிறார். இங்ஙனம் புலவர்கள் பலர் ஒவ்வொரு கடவுளைக் குறித்துள்ளனர்.

இந்தக் குறள் எழுப்பும் சில சிந்தனைகளைக் காணலாம்.

'எண் என்ப ஏனை எழுத்தென்ப; இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு' எனும் குறளில் வள்ளுவரால் எழுத்து என்று குறிப்பிடப்படுவது யாது? மானிடவியல்களை வள்ளுவர் எழுத்து என்று குறிப்பிட்டார் எனப் பேராசிரியர் சி.இலக்குவனார் கருதுகிறார். எண் என்பதற்குக் கணக்கு நூல் எனப் பொருளுரைக்கும் கா.சு.பிள்ளை எழுத்து என்பதனை எழுத்து நூலென்றே குறிக்கிறார். ஆங்கிலத்தில் லெட்டர்சு என்னும் சொல்லுக்கு இலக்கியம் என்றும் பொருள் உண்டு. இலக்கியங்களும் மானிடவியல் நூல்களும் இயற்றப் படுவதற்கு அடிப்படையாய் அமைவன அகர நெடுங்கணக்கேயாகும். அகரமுதல் னகர இறுவாய் அமைந்த தமிழின் முப்பது எழுத்துகளை அடிப்படையாய்க் கொண்டே இத்தனை நூல்களும் இயற்றப்பட்டுள்ளன. அதுபோன்றே உலகம் தோன்றுவதற்கு அடிப்படையாய் அமைந்தது கடவுள் என்னும் முழுமுதற் பொருளே என வள்ளுவர் கருதுகிறார் எனப் பொருள் கொள்ளலாம்.

கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தின் ஏழாவது குறளில் "தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது" என வள்ளுவர் உரைக்கிறார். கடவுள் தனக்கு எவ்வகையான உவமையும்

கூறவியலாச் சிறப்புடையவரென்பது வள்ளுவர் கருத்து. ஏழாவது குறட்பாவில் இக் கருத்தைக் கூறும் வள்ளுவர் முதற் குறளில் கடவுளுக்கு உவமை கூற முற்பட்டது ஏன்?

தமிழ் இலக்கண மரபில் ஒரு பொருளுக்கு வேறொன்றை உவமையாகக் கூறவேண்டுமெனில் மிகவும் உயர்வான ஒன்றையே கூறவேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. கார்மேகம் போன்ற கருங்கூந்தல் என்றே கூறவேண்டும். கரும்புகை போன்ற கருங்கூந்தல் எனல் பிழை, புலிபோலப் பாய்ந்தான் என்பது மரபு; வேட்டைநாய் போலப் பாய்ந்தான் எனல் பிழையும் வழுவுமாகும்.

இதுபோன்றே கடவுளுக்கு உவமை கூற வள்ளுவர் முயன்றபொழுது உயர்ந்த ஒன்றை எண்ணிப் பார்க்கிறார். மொழி என்பது உயர்ந்த ஒன்று; நம் சிந்தையை இயக்குவது; சமுதாயத்தைப் பிணைப்பது; உள்ளம் உயர்ந்திட இலக்கியங்கள் படைக்கவும் உயர்ந்த சிந்தனைகளைத் தொகுக்கவும் கருவியாக அமைவது; எனவே மொழி என்னும் உயர்ந்த ஒன்றைக் கடவுளுக்கு உவமையாகக் கூறலாம் எனக் கருதுகிறார். இந்நிலையிலும் அவர் தமது பொதுமைப் போக்கிலிருந்து பிறழாமல் தமிழ் எனக் கூறாமல் மொழி என்று பொதுப்படப் பொருள் கொள்ளும் வகையில் கூறுகிறார். எழுத்து என்னும் பொதுச் சொல்லால் குறிக்கிறார். எனினும் தமிழர் சமய வேறுபாடின்றி மொழியைப் போற்றியவர்கள் என்பது வரலாற்றுண்மை. தலைச் சங்கத்திற்குக் கண்ணுதற் கடவுளே தலைவராக அமைந்தாரென்னும் கூற்றும் 'பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலே' என்னும் ஆழ்வார் அருளிச்செயலும் இவ்வுண்மையை வலியுறுத்துகின்றன. கடவுள் வாழ்த்துக்கு நிகராகத் தமிழ் வாழ்த்துப் பாடும் இன்றைய காலம் வரை இச்சிந்தனைப்போக்கு தொடர்ந்து வருவதைக் காணலாம்.

எனவே வள்ளுவப் பெருந்தகை 'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை' என்னும் தொல்காப்பிய மரபுக்கேற்பத் தமிழ்நெடுங்கணக்கை உவமைகூற முற்பட்டார் எனக் கொள்வதில் பிழையில்லை.

சைவரும் வைணவரும் சமணரும் பௌத்தரும் கிறித்துவரும் இசுலாமியரும் தத்தமது காப்பியங்களில் கடவுளுக்கு இணையாகத் தமிழைப் போற்றிய திறத்தை விரிக்கிற்பெருகும். இத்தகைய தமிழர்தம் மொழிபோற்றல் மனப்பான்மையை மனத்துட்கொண்டே திருவள்ளுவர் பாடினார் என எண்ணும்போது இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்துவரும் பண்பாட்டுநெறி வெள்ளிடைமலையெனத் தெளிவாகிறதெனலாம்.

# குறுக்குத்துறைக்குமரன் பிள்ளைத்தமிழ்

முனைவர் நெல்லை ந.சொக்கலிங்கம்

**முன்னுரை**

*"கொள்ளை யழகார் குறுக்குத் துறைக்குமரன்*
*பிள்ளைத் தமிழினிது பேசினான் - உள்ளமுயர்*
*ஆறு முகக்கவிஞன் அன்புடனே ஓதுபவர்*
*தேறுமுக மாவார் சிறந்து"* *(திருமுருக கிருபானந்தவாரியார்)*

என்று வாரியாரால் வாயாரப் புகழப்பெற்ற புலவர் 'சிவதாசன்' என்னும் தி.சு.ஆறுமுகம்; நெல்லை நகர்ப்புலவர் இவர். தண்பொருநை ஆற்றின் ஆற்றிடைக்குறையாக இருக்கும் பெருமணல் திட்டில் குடிகொண்டிருக்கும் முருகப்பெருமான் மீது பழந்தமிழ் மரபு பிறழாமல் பாடப்பெற்ற நூலாம் குறுக்குத்துறைக் குமரன் பிள்ளைத்தமிழ்.

திரு.ஆறுமுகனார் குறுக்குத்துறை முருகன் மீது கலம்பகம், குறவஞ்சி, கொச்சகக் கலிப்பா, பதிற்றுப்பத்தந்தாதி, பொன்னூசல் போன்ற பன்னூல்கள் படைத்துப் பாமாலை சூட்டி மகிழ்ந்தவர். 26 நூல்களுக்குமேல் படைத்துத் தம் புலமைச் செழுமையைத் தமிழுக்களித்த தகைமையாளர். அவருடைய குறுக்குத்துறைக் குமரன் பிள்ளைத்தமிழ் பற்றிப் பேசமுனைகிறது இக்கட்டுரை. இந்நூல் 1971-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் புலவர் ஆறுமுகப் பெருந்தகையால் பாடப்பெற்று வெளிவந்துள்ளது. இந்நூலில் முதற்கண் அமைவது 'திருவுரு மாமலைத் திருமுருகன் திருப்பள்ளியெழுச்சி'யாகும். பத்துப் பாடல்கள் கொண்ட இதனைத் தொடர்ந்து 'பிள்ளைத்தமிழ்' அமைகின்றது.

**நூல் அமைப்பும் அழகும்**

*"காப்பொடு செங்கீரை தால்சப் பாணி*
*யாப்புறு முத்தம் வருகஎன் றல்முதல்*
*அம்புலி சிற்றில் சிறுபறை சிறுதேர்*
*நம்பிய மற்றவை சுற்றத் தளவென*
*விளம்பினர் தெய்வ நலம்பெறு புலவர்"* *(பன்னிரு.102)*

எனவரும் பிள்ளைத்தமிழ் இலக்கணத்திற்கு ஏற்ப இக் 'குறுக்குத்துறைக் குமரன் பிள்ளைத் தமிழ் காப்பு, செங்கீரை என ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்கு உரிய பத்துப் பருவங்கள் உடையதாகும். ஆசிரிய விருத்தப் பாக்களால் அமைவது இது. பருவத்திற்குப் பத்துப் பத்துப் பாடல்களைப் புலவர் தி.சு.ஆறுமுகனார் பகர்ந்துள்ளார். கற்பனை நலம் சிறந்த நூலாகும் இது.

"துகளறு தண்குறுக்குத் துறைவாழுங்
குமரனென்னும் சுடர்வே லன்மேல்
இகழறுமெய்க் காதலினா லிப்பிள்ளைத்
தமிழ்தனையே இயம்பி னான்நற்

*புகழுறுசீர் திருநெல்லைப் பொற்பதிவாழ்*
*பேதமிலாப் புலவ னிந்நூல்*
*திகழுறுமென் றெண்ணமுடன் சிவதாசன்*
*ஆறுமுகன் தெரிந்த வாறே"*

என்பது இந்நூலின் இறுதிப்பாடலாகும். தி.சு.ஆறுமுகனார் நெல்லையின் வளம், பழந்தமிழ்ப் பாடலடிகள், புராணக்கருத்துக்கள், இயற்கை வருணனை, இறையுணர்வு, உவமை, சிலேடை, உருவகம் போன்ற அணிகள், சொன்னயம், பொருள்நயம் எனப் புலமைவளம் பெருக்கெடுக்க இப்பிள்ளைத்தமிழ் நூலை யாத்துள்ளார். நூலின் தொடக்கமாக அமையும் காப்புப் பருவப் பாடல்களுக்குமுன் இவர் காப்புப் பாடல்கள் ஐந்தைப் படைத்துள்ளார்.

**புராணமரபுக் கூறுகள்**

இறையுணர்வுப் பாடல்கள் பாடும் பாவலர்கள் தங்கள் படைப்புகளில் புராண மரபுகளை ஆங்காங்கே சுட்டிப் போதலுண்டு. அவ்வகையில் ஆறுமுகனாரும் முருகப் பெருமான் வாழ்வுடன் தொடர்புடைய புராணமரபுச் செய்திகளைப் பயன்படுத்தியுள்ளார். காப்புப் பருவ முதற் பாடலில் திருமாலின் திருவடிகளைத் தொழும் போது நூலாசிரியர், பிரமதேவன் மூலப்பிரணவ மந்திரத்தை அறியாமல் இருந்தமையால், குமரன் அவனைக் குட்டினான்; சிறையிலிட்டான். இப்புராணக் கதையினை,

*"பூதங்கு நான்முகன் பெருமிதத் தோடன்று*
*பொற்கயிலை புகுந்து மூலப்*
*பிரணவ மறியாது பொறிகலங்கி நின்றிடப்*
*பிடித்தவனைச் சென்னிகுட்டிக்*
*காதங்குக் கிள்ளியே காவலிடு வேலவன்"* *(காப்பு.1)*

எனக் கூறுவதோடு சிவபெருமானின் அடியைத் திருமால் தேடிய பாங்கினை,

*"சேதங்கு சிவனடி தேடியுங் காணாத*
*செங்கண்ண னாய திருமால்"* *(மேலது, 1)*

எனச் சொல்வது கொண்டும் அறியலாம்.

*"தந்தைக்கும் உபதேசம் செய்த குருவை"* *(மேலது,2)*

*"நாடிப் புனத்தே வேடுவனாய்*
*நங்கை வள்ளி தனைவிரும்பி*
*நளின மென்வா யைக்கிளறி*
*நடுவே வேங்கை மரமாகிக்*
*கூடிக்குலவிக் குமரனெனுங்*
*கோலம் மாறிக் கிழமாகிக்*
*கொம்புத் தேனும் தினைமாவுங்*
*கொடுக்க வுண்டு..."* *(தாலப்.9)*

என்றும் கூறி முருகப் பெருமானின் வாழ்வோடு தொடர்புடைய புராணமரபுக் கூறுகளைத் தக்கவிடத்தில் பயன்படுத்தி இப்புலவர் தம் படைப்பை மேன்மைப் படுத்தியுள்ளார்.

**இயற்கைக் காட்சிகளின் எழில்**

இயற்கைக் காட்சிகளை வாழ்க்கையோடு இணைத்துப் பாடிப் போற்றுவது தமிழ்ப்புலவர்களின் தகைமையாகும். இயற்கைப் பின்புலமாக அமைந்து நமக்கு நல்ல பாடத்தைப் புகட்டுவதாகப் பழந்தமிழ்ச் சான்றோர்கள் பாடல்கள் புனைந்தனர். அவ்வழியிலே சிற்றிலக்கியம் பாடிய நம் தி.சு.ஆறுமுகனாரும் இயற்கைக் காட்சிகளைப் புனைந்து நம் கற்பனை உணர்வைத் தூண்டி மகிழச் செய்துள்ளார்.

*"காமலியும் திருவுரு மாமலைவாழ் சேயோன்"* (காப்பு,1)
*"மழைதங்கு திருவுரு மாலை"* (மேலது, 4)
*"பங்கப் பழனத் துழுசாலில்*
*பணிய நிரைகள் குவிமுத்தால்*
*பகல்போல் இரவில் ஒளி வளரும்*
*பதியாம் நெல்லைக் கழகுதரும்*
*புங்கத்திருவா றாம்பொருநை"* (மேலது, 10)
*"அளிநல் லிசையை யிசைத்துவர*
*அலைகள் முழவா யொலிகிளப்ப*
*அலவன் கரையில் நடமிட*
*அணிசேர் குமுதம் தலையாட்ட*
*நளினம் விரிந்து விளக்குயர்த்த*
*நானா விதமாய்ப் பலகயல்கள்*
*நனிவான் துள்ளிக் கீழ்விழுந்து*
*நலமே வாண வெடிமுழக்க*
*ஒளிசேர் நாரை மேதிமிசை*
*உவப்பா யேறித் தடங்கயத்துள்*
*உலவிப் பவனி வரும்எழில்..."* (செங்கீரை, 10)

எனப் பலவாறு கற்பனைச்சுவை ததும்ப இயற்கைக் காட்சிகளை ஆறுமுகனார் நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துவர்.

செங்கீரைப் பருவப் பத்தாவது பாடலுடன் கம்பர் பாடியுள்ள பாலகாண்டப் பாடலை ஒப்பிட்டுப் பார்க்கலாம். கம்பரின் புலமைத் தாக்கம் என இதனைக் கருதலாம். அப்பாடல் வருமாறு:

*"தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்கக்*
*கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்துநோக்கத்*
*தெண்டிரை எழினிகாட்டத் தேம்பிழி மகர யாழின்*
*வண்டுகள் இனிதுபாட மருதம் வீற்றிருக்கும் மாதோ"* (கம்ப.பால.நாட்டுப்.4)

குறுக்குத்துறையின் செழிப்பை ஆறுமுகனார்,

*"பாடக் குயில்கள் பயில்சோலை படரும் குறுக்குத்துறை"* (தாலப்.7)
*"பனைகள் சூழும் பசுஞ்சோலை படரும் குறுக்குத்துறை"* (மேலது,8)
*"பாடிக் களிக்கும் பைங்கிளிகள் பயிலுங் குறுக்குத்துறை"* (மேலது, 9)

எனப் பாடிப் போற்றுவார். பொருநை ஆறு பாய்ந்து வரும்; அது நானிலங்களிலும் பாய்ந்து திருச்செந்தூர் அருகில் கடலோடு கலக்கும் பாங்கினைப் பின்வருமாறு

இவர் பாடி மகிழ்கின்றார். பொருநையின் பெருக்கில் நம் நெஞ்சமும் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்குமாறு இவர் பாடிக் களிக்கின்றார்.

"பொதிகைப் பொருப்பின் குதித்திறங்கிப்
புனஞ்சேர் குறிஞ்சி வளம்பெருக்கிப்
புலத்தியன்றன் சுதன்பெருமை
புவிக்கே காட்டித்தனைச் சேர்ந்தார்
விதியாம் பாவ வினைதீர்த்து
வியனார் முல்லை வளங்கொண்டு
விளைசெய் மருதம் புகுந்துலவி
விரிந்தே தேங்கி நெல்விளைத்துக்
குதியா தேகி வைகுண்டங்
கூடிநீங்கி நெய்தலிலே
குலைவாய்த் தூங்கி விழுந்துருண்டு
கோலக் கடலின் சுரத்தணையும்" (செங்கீரைப்.6)

நாட்டுச் சிறப்பை ஆறுமுகனார்,

"விடஞ்சேர் கண்டன் மிசையன்பு
மிகவே கொண்டு தூய்மையுடன்
வெண்ணீ றணிந்து வீடுபெற்ற
மெய்யர் வாழ்ந்த நாட்டினிலே..." (மேலது, 7)

என்று பாடுவார். பொருநையின் இருகரைகளிலும் இயற்கை எழில் கொஞ்சும். அவற்றை இன்றும் கண்டு துய்க்கும் நம் நெஞ்சம். இதோ:

"ஒருசார் செந்நெல் விளைந்துவிழும்
ஒருசார் கன்னல் பருத்தோங்கும்
ஒருசார் மஞ்சள் அடர்ந்திருக்கும்
ஒருசார் சேம்பு போட்டியிடும்
ஒருசார் மாவின் கனி சொரியும்
ஒருசார் நெல்லிச் சரங்குலுங்கும்
ஒருசார் பெண்ணை பழமுதிர்க்கும்
ஒருசார் தெங்கின் குலைபெருக்கும்"

இக்காட்சிகளைக் கண்ட முல்லையும் பிச்சியும் முறுவலிக்குமாம்.

"ஒருசார் முல்லை முறுவலிக்கும்
ஒருசார் பிச்சி மணங்கமழும்" (செங்கீரை, 8)

இப்படி, புலவர் ஆறுமுகனார் இயற்கைக் காட்சிகளை அப்படியே நம் கண்முன் கொண்டு வந்து சொல்லோவியமாய்த் தீட்டி நம்மையும் அங்கே அழைத்துச் செல்கின்றார்; மகிழச் செய்துவிடுகின்றார்.

**சந்தம் மிகு செந்தமிழ்**

எதுகை, மோனை, முரண் போன்ற தொடை நலன்கள் நிறைந்து தமிழ்ச்சுவை பொதுள அமைவன புலவர் ஆறுமுகனாரின் அருந்தமிழ்ப் பனுவல்கள். முருகனைப் பாடிப் பரவும் இப்பிள்ளைத்தமிழில் சந்த நயம் துள்ளிப் பாய்கின்றது. இப்போது இவருடைய சந்தம் பற்றிச் சிந்திப்போம்:

*"தேடக்கிடையாத் திரவியமே*
*தின்னத் தெவிட்டாத் தேன்பாகே*
*தொட்டால் மணக்கும் சவ்வாதே*
*சொன்னால் இனிக்கும் திருப்பெயரே*
*நாடக் கிடையாப் பரம்பொருளே*
*நலிவோர்க் கென்றும் நன்மருந்தே*
*நால்வே தத்தி னுட்பொருளே*
*நாவல் லோரின் நற்றுணையே..."* *(தாலப்.7)*

என்றும்,

*"மேக மோடு திங்க ளீயும்*
*முத்தி னுக்குண் டாம்விலை*
*மீன மிப்பிசங்கு நத்தின்*
*முத்தி னுக்குண் டாம்விலை*
*பூக மோடு வாழை செந்நெல்*
*மூங்கி லுக்குத் தாமரை*
*பொருந் நித்தி லந்த னக்கும்*
*பேச லுண்டு மாம்விலை"*

எனப் பாடிவிட்டு,

*"ஏக னேநின் முத்தினுக்கு*
*யார்ம திப்ப ரேவிலை"* *(முத்தப் 6)*

என்று உயர்த்திக்கூறி முருகப்பெருமானை முத்தம் தர அழைக்கின்றார். மற்றுமொரு முத்தப் பருவப் பாடல் ஒன்றை இப்போது கண்டு ஆறுமுகனாரின் சந்தச் செந்தமிழைக் கொண்டாடுவோம்:

*"தேனார் முல்லை சிரிப்பதுடன்*
*தினையும் சிரிக்கும் புனத்திடையே*
*சென்றே சேடி மார்களுடன்*
*சிரித்தே பேசிக் குரலெழுப்பி*
*மானார் வள்ளி கவண்வீச*
*மங்கை யவள்தன் இன்குரலால்*
*மருங்கார் புட்கள் மருளாமல்*
*மலர மலரத் தாம்சிரிக்கும்..."* *(முத்தப்.2)*

தற்குறிப்பேற்ற அணியுடன் அமையும் இப்பாடலில் கற்பனையும் கன்னித் தமிழ்ச் சந்தமும் போட்டிபோடக் காண்கின்றோம்.

**ஆறுமுகனாரின் அருந்தமிழ்ப் புலமை**

பழந்தமிழ்ப் புலமை மரபில் வந்தவர் புலவர் தி.சு.ஆறுமுகனார். அப்புலவர்கள் போற்றிய ஆழ்ந்த புலமை மரபுகளை எல்லாம் ஆறுமுகனார் தம் படைப்பான குறுக்குத்துறைக் குமரன் பிள்ளைத்தமிழ் நூலிலும் பயன்படுத்தித் தம்முடைய பழுத்த தமிழ்ப்புலமையை வெளிக்காட்டியுள்ளார் எனலாம். இங்கே அத்தாக்கங்களைக் கண்டு நாம் தமிழின்பம் பருகுவோம்.

இரட்டுறமொழிதல் என்னும் சிலேடை நயத்தினால் பிள்ளைத்தமிழ் நூலுக்குப் புலவர்கள் அழகு கூட்டுவர். குறுக்குத்துறை எங்கும் தாமரை மலர்ந்திருக்கும்; அம்மட்டோ! சூழ்ந்துள்ள சோலைகளுக்குள்ளே தாமரை (மான்கள்) எங்கும் திரியும்; கரைகளில் புள்ளினங்கள் (குருகார்) சூழ்ந்திருக்கும்; மனம் மற்றும் உடல் தூய்மை இல்லாதோர் இத்துறையை அணுகமாட்டார்கள் (குறுகாரே); வினைகள் தீர்ப்பது முருகன் திருவடிவேலாகும்; முருகப் பெருமானின் திருவடியே வியக்கும் பெருமைக்குரியதாகும். இப்படி அப்பாடல் முழுவதும் சிலேடை நயம் அணிசெய்யக் காண்கின்றோம்.

சிலேடை அமைந்து சிறக்கும் அப்பாடல் இதோ:

*"சுனைகள் முற்றுந் தாமரையே*
*சோலை யெங்குந் தாமரையே*
*சூழக் கரையிற் குருகாரே*
*தூய்மை இல்லார் குறுகாரே!*
*வினைகள் தீர்க்கும் திருவடிவேல்*
*வியனார் தாமரை திருவடிவே;*
*விண்ணிற் றிரளுங் கரும்புயலே*
*மனைகள் தோறும் மங்கலனே*
*மாதர் கற்பே மங்கலனே*
*மக்க ளுள்ளந் தண்ணளியே*
*மலர்கள் மேவும் பண்ணளியே"* (தாலப்.8)

'அம்புலி புலவர்க்குப் புலி' என்பது பழமொழி. அவ் அம்புலிப் பருவத்திலும் கூடத் தி.சு.ஆறுமுகனார் சிலேடை நயம் தோன்றப் பாடுகின்றார்.

*"தலை ஆறுடையான் தலைநின்றாய்*
*தலையா றுடையான் தலைநின்றான்*
*தாரம் பலவே நீகொள்ளத்*
*தாரம் பலவே இவன் கொண்டான்"* (அம்புலிப்.1)

என்று முருகப்பெருமானையும் அம்புலியையும் ஒப்பிட்டுப் பேசும் சிலேடை அமைப்பு அறிந்தின்புறத்தகும். களங்கம் (குறைபாடு) என்னும் சொல்லை வைத்து இவர் அமைக்கும் சிலேடை இதோ:

*"அக்க ரங்கள் ஆறுடையான்*
*அகளங் கன்;நீ யோகளங்கன்"* (அம்புலிப்.5)

எண்ணலங்காரம் என்பதும் ஓரணியாகும். அப்படி எண்கள் வரும் வண்ணம் பாடியுள்ள முத்தப்பருவ முதற்பாடல் சுவை கூட்டும்; அவரின் புலமைத்திறம் காட்டும்.

*"மேவு திசைகள் எண்பாலும்*
*சத்தாய் விளங்கும் மலைமாதின்*
*சவியார் நகில்நின்று எழுபாலும்*
*சாற்றுஞ் சுரவான் மடிசேரும்*
*சளிப்பும் கைப்பும் அறுபாலும்*

*வத்தாத் தமிழின் ஐம்பாலும்*
*வளமார் மறையின் நாற்பாலும்*
*வள்ளல் அளித்த முப்பாலும்*
*மணக்கு முன்றன் திருவாயால்*
*முத்தாய்ச் சொரிந்தே யிருபாலும்*
*மிளிரும் பொருநை ஒருபால்"* (முத்தப்.1)

என்று கீழ்வாய் இலக்கமாக இவர் பாடிவரும் பாங்கு மனத்தைப் பிணிப்பதாக அமைகின்றது.

இயல்பாக நடக்கும் நிகழ்ச்சியில் புலவர் தி.சு.ஆறுமுகனார் தம் கருத்தை ஏற்றிக் கூறுகின்றார். இது தற்குறிப்பேற்றம் என்னும் அணியாகும். மாமரத்தில் சிறுவர்கள் மாங்காய் வேண்டிக் கல் எறிந்தனர்; அம்மரத்தில் இருந்த மந்திக் கூட்டம் முண்டியடித்து ஓடினவாம்; அங்கே நிறைய விளைந்துள்ள தெங்கின் உச்சிக்கு அவை தாவும்போது தேங்காய் நெற்று ஒன்று இற்று வீழ்ந்தது. அது மாங்கிளையில் கட்டியிருந்த தேன் கூட்டில் வீழ்ந்தது. அப்போது அப்பக்கத்து வளர்ந்துள்ள கிளையொன்று அந்தத் தேன்கூட்டைத் தாங்கிச் சிதையாமல் பரிவாய்க் காத்ததுவாம். இக்கருத்தமைந்த பாடல் வருமாறு:

*"மாங்காய் விரும்பி வருஞ்சிறுவர்*
*மரமேல் கற்கள் பலவீச*
*மரமார் மந்திக் குழுகலைந்து*
*முண்டி யடித்தே விழுந்தோடி*
*ஆங்கார் தெங்கின் முடிதாவ*
*அலறிக் காய்ந்த நெற்றொன்றே*
*அடியில் ஒருமாங் கிளையினிலே*
*அடர்தேன் கூட்டை நோக்கிவிழப்*
*பாங்கார் கிளையொன் றதுகண்டு*
*பதறிக் குறுக்கே விரைந்தேற்றுப்*
*படர்தேன் கூடு-சிதையாமல்*
பரிவாய்க் காக்கும்"* (சிற்றில். 7)

தேன்கூடு சிதையாமல் மற்றொரு கிளை தாங்கிற்று என்று ஆறுமுகனார் தம் கருத்தை ஏற்றிக் கூறுதல் கொண்டு இவர்தம் இரக்கவுணர்வு நன்கு புலனாகும். வல்வில் ஓரியின் வில்லாற்றல் குறித்துப் புறநானூறு பேசும். ஓரி எய்த அம்பு யானையைக் கொன்று வீழ்த்திப்பின் பெருவாயுடைய புலியையும் இறந்துபடும் வண்ணம் செய்து, புள்ளிமானையும் உருட்டி, உரல் போன்ற தலையுடைய பன்றியை வீழச் செய்து பின், புறத்தில் பதுங்கியிருந்த உடும்பையும் வீழ்த்திற்றாம்.

*"வேழம் வீழ்ந்த விழுத்தொடைப் பகழி*
*பேழ்வா யுழுவையைப் பெரும்பிறி துறீஇப்*
*புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி யுரற்றலைக்*
*கேழல் பன்றி வீழ வயல*

*தாழற் புற்றத் துடும்பிற் செற்றும்*
*வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்"* *(புறம்.152)*

என்ற வன்பரணரின் புறப்பாடல் இங்கு ஒப்புநோக்கத்தகும். சிறுவர் எறிந்த கல் மாங்காயைத் தாக்கியதைத் தவிர அந்தக் கல் வேறு தாக்கங்களை ஏற்படுத்தவில்லை என்பது இவண் எண்ணத்தகும். ஒருபுடை ஒப்புமையாக ஆறுமுகனாரின் பாடலுடன் புறப்பாடல் இணைத்துக் காணத்தகும். பிள்ளைத்தமிழ் நடையில் தொடை நயங்களும் வரும்; குறிப்பாக,

*"பழுதில் வடிவன் செம்மதியன்*
*பாராய் நீயோ குறைவடிவன்*
*படர்கொண் டுழலும் வெண்மதியன்"* *(அம்புலிப்.4)*

எனவரும் முரண் தொடை ஆறுமுகனாரின் புலமைக்கு அரணாக அமைகிறது.

**பழந்தமிழ்ப் புலவர்களைப் போற்றல்**

முருகனின் புகழ்பாட வந்த புலவர் ஆறுமுகனார் ஆறுமுகனின் அடியவர்களைப் போற்றிப் பாடி மகிழ்கின்றார்.

*"சங்கத் தலைவன் நக்கீரன்*
*சந்தப் புகழ்பா டருணகிரி*
*சாரும் புராணக் கச்சியப்பன்*
*சதுர்வே தியன்ப கழிக்கூத்தன்*
*துங்கக் கவிசெய் குமரகுரு*
*தொண்டன் வீரவாகெனுமித்*
*தூயர் தொடர்பா லவர்பாதம்*
*தொழுது தொழுது வாழ்த்துவமே"* *(காப்புப். 10)*

என்றும்,

*"உருகிப் புலவர் நிலைகாணின்*
*உள்ளத் துடனே முகமலர்ந்தே*
*உதவும் குமணன் போலினியை"* *(முத்தப்.4)*

என்றும் வருவனவும், திருஞானசம்பந்தர் ஞானப்பாலருந்தியமை, சைவத்தை வளர்த்தமை, கூன்பாண்டியனைச் சைவத்திற்கு மாறுமாறு செய்தமை, எலும்பை உயிர்த்தெழச் செய்து (பூம்பாவை) அருள்புரிந்தமை, ஆண்பனையைப் பெண்பனையாக்கியமை எனப் பல அருட்செயல்களையும் இவர் பிள்ளைத் தமிழ்வழி வரலாற்றுண்மைகளைப் பாடிப் போற்றியுள்ளார். இவற்றால் இவர்தம் பழந்தமிழ்ச் சான்றோரிடம் இவர் கொண்டிருந்த ஈடுபாடு நன்கு புலப்படும்.

**நெல்வேலிச் சிறப்புகள்**

புலவர்கள் தாம் வாழ்கின்ற ஊரின், நகரத்தின் இயல்புகளைத் தாம் படைக்கின்ற பாடல்களில் குறிப்பிட்டுப் போவர். அம்முறையில் புலவர் தி.சு.ஆறுமுகனார் நெல்லையையும் அங்கு வழங்கும் பேச்சு வழக்குகளையும் இடங்களையும் பதிவு செய்துள்ளார் என்பதனைப் பின்வரும் பாடல் அடிகள் வாயிலாக நாம் அறிந்தின்புற ஒண்ணும்! எங்கே போவது எனத் தெரியாமல் திரிபவரை நெல்லை மக்கள் 'தட்டழிதல்' என்பர். இச்சொல்லை ஆறுமுகனார்,

"நீரினில் தட்டழிந் தேகரை
சார்ந்தவண் நோக்கிட..." (சப்பாணிப். 7)

எனச் சுட்டுவார். முரடர்களை நெல்லை மக்கள் 'சல்லிப்பயல்' என்பர். இவ்வழக்கை,

"சற்றும் அடக்கமி லாதுகு தித்திடர்
சார்ந்திடுஞ் சல்லியர்போல" (சப்பாணிப். 8)

எனவரும் பாடலில் பயன்படுத்தியுள்ளார்.

நெல்லை நகரில் சந்திப்பிள்ளையார் திருக்கோயில் பெரிதாகப் பேசப்பெறும் இடமாகும். இதனை,

"திருநெல்லை சந்திவி நாயகரின் சீரடி
சிரமீது கொள்வ மாதே" (காப்புப்.2)

எனச் சுட்டுவார். குறுக்குத்துறைக் குமரன் தலத்தைத் "திருவுருமாமலை" என்று வழங்கும் இலக்கிய வழக்கிற்கு உயிரூட்டிப் பல பாடல்களில் இவர் பேசியுள்ளார். நெல்லையையும் பாளையங்கோட்டையையும் இணைக்கும் பாலத்தைக் கட்ட உதவிய வள்ளல் சுலோச்சன முதலியார் ஆவார். அவர்தம் வள்ளன்மையைப் பின்வரும் பாடலில் ஆறுமுகனார் சுட்டியுள்ளார்.

"வள்ளல் தூய சுலோசனனின்
வளமார் பொருநை மீதமைந்த
வாரா வதியின் வழிபாயும்
வலிவா ரிருப்புப் பாதையிலும்
வெள்ளம் போன்று விரைந்தோடும்
விந்தை தன்னை நீகண்டு
வெறித்தே யிங்ஙன் நின்றாயோ" (செங்கீரைப்.9)

என்று ஆறுமுகனார் வியந்து போற்றுவதும் சுலோசன முதலியார் பாலம், திருச்செந்தூர் புகையூர்தி செல்ல இருப்புப்பாலம் இவற்றைக் கண்டு குறுக்குத்துறைக் குமரன் வெறித்து நின்று பார்க்கிறானோ? என்று தற்குறிப்பேற்றமாகப் பாடுவார். இவ்வாறு நெல்லையின் காட்சிகளை எல்லாம் இவர் பிள்ளைத்தமிழ் நூலுள் பதிவு செய்துள்ளார்.

**தத்துவமுத்துக்கள்**

சைவசித்தாந்தத்தில் மார்க்கட (குரங்கு) நியாயம், மார்ச்சால (பூனை) நியாயம் என இருவகை நிலைகூறுவர். குட்டி தன் தாய்க்குரங்கை இறுகப்பற்றிக் கொள்வது ஒரு வகை நெறி. குட்டியைத் தான் கவ்விச் செல்லும் பூனை. அதுபோல இறைவன் அடியவரை எளிவந்த பிரானாகி அருள்பாலித்து ஆட்கொள்வான். இது ஒருவகை நெறி. இத்தத்துவக் கருத்தைப் புலவர் தி.சு. ஆறுமுகனார் குறுக்குத்துறைக் குமரன் பிள்ளைத்தமிழின் சிறுபறைப் பருவத்தில் ஒரு பாடலில் கூறுவது எண்ணிப் பார்ப்பதற்கு உரியதாகும்.

"தாயாம் மந்தி தனைப்பற்றித்
தவிப்புற் றிருக்கும் குட்டியெனத்
தாமே யெம்மை வந்தடைவீர்
தவறி னாலும் தவிப்பொழியச்

*சேயாம் குட்டி தனைநாடிச்*
*சேரவந்தே யெடுத்தேகும்*
*சீரார் பூசை யெனவந்து*
*சிந்தை மகிழ அரவணைப்போம்*
*மாயா வுலகில் வருந்தாதீர்*
*வந்தோம் வந்தோம் எனவுன்றன்*
*மழலை முழக்கி அதற்கேற்ப*
*மன்னே முழக்கு சிறுபறையே..."* **(சிறுபறைப்.10)**

என்பது தத்துவ முத்துப் பொதிந்துள்ள பாடல்.

**முடிவுரை**

திருநெல்வேலியில் தண்பொருநை ஆற்றின் நடுவில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் குறுக்குத்துறைக் குமரன் மேல் புலவர் தி.சு.ஆறுமுகனார் பாடியருளிய குமரன் பிள்ளைத்தமிழ் நூல் பழந்தமிழ் மரபு போற்றிய நூலாகும்.

இந்நூலின்கண் ஆறுமுகனாரின் சீரியமுருகபக்தியும், தமிழ் உணர்வும், புலமைச் சிறப்பும் செறிந்து விளங்குதல் கண்டோம். இத்தகைய சிறப்புக்களைச் சீர்தூக்கிப் பார்த்த கோவை சிரவை ஆதீனக் குருமகாசந்நிதானம் தவத்திரு. சுந்தர சுவாமிகள்,

"கற்ற புலவர் கவினார் கவிவல்லார்
நற்றகைய ஆறுமுக னாரின்று - சொற்றபிள்ளைப்
பாடல்குறுக் குத்துறையார் பாலமுரு கோனருளைக்
கூட மிகத்துணையா கும்"

எனப் போற்றிப் பாராட்டுவார்.

**துணைநின்ற நூல்**

குறுக்குத்துறை குமரன் பிள்ளைத்தமிழ், வித்துவான் தி.சு.ஆறுமுகம் (கவிஞர் சிவதாசன்), சொந்த வெளியீடு, திருநெல்வேலி, 1971.

# பட்டினப்பாலை கூறும் வணிகத் தொடர்புகள்

பேரா.முனைவர் **இ.கி.இராமசாமி**
**மேனாள் தலைவர், தமிழ் உயராய்வு மையம்,**
**யாதவர் கல்லூரி, மதுரை - 14.**

**அறிமுகம்**

தமிழர் வரலாற்றையும் நாகரிகத்தையும் பண்பாட்டையும் பொருளாதார நிலையையும் பேசுகின்ற சங்க இலக்கியக் களஞ்சியத்தில் ஒன்றாகத் திகழ்வது அகத்திணைப் பாடலாகிய பட்டினப்பாலை. ஓர் அகத்திணைப் பாட்டில் வாணிகம் தொடர்பாக இத்தனை தகவல்களா? என்று வியக்கும் வண்ணம் அதில் செய்திகள் பொதிந்துகிடக்கின்றன.

பட்டினப்பாலையைப் பாடியவர் உருத்திரங்கண்ணனார். பாட்டுடைத் தலைவன் சோழன் கரிகாற் பெருவளத்தான். அவன் ஆட்சிக் காலத்தில் தலைநகரமாகவும் துறைமுகமாகவும் இருந்தது காவிரிப்பூம்பட்டினம். அதன் பொருள்வளத்தையும் மாண்பையும் இந்தப்பாட்டு விளக்குகின்றது. பண்டைத்தமிழரின் உள்நாட்டு வாணிகத்தையும், வெளிநாட்டு வாணிகத்தையும் பற்றிப் பிற நூல்கள் கூறுவதைக் காட்டிலும் விரிவான வரலாற்றுச் செய்திகளைப் பட்டினப்பாலையுள் காணமுடிகின்றது. நீர்வழிப்பாதை பற்றிய இன்றியமையாத குறிப்பையும் அறிய முடிகின்றது. இயற்கை அழகும், தரமான நகர வடிவமைப்பும், குன்றாத பொருள் வளமும் இருந்தமையால் காவிரிப்பூம்பட்டினம், முட்டாச்சிறப்பின் பட்டினம் என்று புகழப்பட்டது. காவிரி ஆறு கடலில் சென்று கலக்கும் இடத்தில் அமைந்த நகரம் ஆதலால் அது காவிரி புகும் பட்டினமாக வழங்கிப் பின்னர்க் காவிரிப்பூம் பட்டினமாக மருவியது. புகும்+புகார்=பூம்புகாராயிற்று.

**உள்ளடக்கம்**

நூலின் உள்ளடக்கம் அகப்பொருள் நிலையில் பிரிதலையும் பிரிதல் நிமித்தத்தையும் சார்ந்தது. நூலின் கட்டமைப்பு, பகுதி பகுதியாக நாட்டு வளத்தையும் நகர் வளத்தையும் வாணிகச் சிறப்பையும் விளக்குகின்றது.

**வாணிகவளம்**

1. பண்டகசாலை, 2.அங்காடித்தெரு, 3.கடைகளில் பறக்கும் கொடிகளின் சிறப்பு, 4. பொருள் வளம், 5.விற்பனை முறை, 6.சுங்கவரி, 7.பலநாட்டவரும் நல்லிணக்கத்தோடு வாழும் நிலை, 8. பெருவளத்தானின் வெற்றிச் சிறப்பு, ஆட்சிச்சிறப்பு ஆகியவை அந்த நாட்டு வணிகத்தோடு நேரடித் தொடர்புடையவை. நூல் கூறுகின்ற செய்திகளுள் அக்கால வாணிகமுறை, வாணிகத் தொடர்புகள் பற்றி மட்டும் இங்கு விரிவாகக் காண்போம். காவிரிப்பூம்பட்டினத்தில் ஏற்றுமதியும் இறக்குமதியும் நாள்தோறும் தொடர்ந்து

நடைபெற்றுக் கொண்டிருந்தன. அக்காட்சி எவ்வாறு இருந்தது தெரியுமா? மலைமீது மழையாகப் பொழிந்த நீர் கடலில் பரவுதல்போலவும், கடல்நீர் மேகமாகி மேலே சென்று மலைமீது பொழிவது போலவும் இருந்ததாம். நீரிலிருந்து நிலத்தில் இறங்குவதும், நிலத்திலிருந்து கலத்தில் (கப்பல்) ஏறுவதுமாக அளப்பரிய பண்டங்கள் துறைமுகத்தில் கையாளப்பட்டனவாம்.

**படகுகளும் நாவாய்களும்**

உள்ளூர் நீர்வழிப் பாதையாகிய ஆற்றிலும் உப்பங்கழியிலும் செலுத்துவதற்குரிய சிறிய படகுகளும், கடலில் செலுத்துவதற்குரிய பெரிய நாவாய்களும் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டன. உள்ளூர் நீர்வழிப்பாதையில் பயன்பட்ட படகு 'பஃறி' என்று அழைக்கப்பட்டது. அதில் உப்பை ஏற்றிச் சென்று விற்றனர். பண்டமாற்றாக நெல்லைப் பெற்று வந்தனர்.

*"குறும்பல்லூர் நெடுஞ் சோணாட்டு*
*வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி*
*நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி"*

இதனை உள்நாட்டு வாணிகமாகக் கொள்ளலாம். படகுகள் கரையில் வரிசையாகக் கட்டி வைக்கப்பட்டிருந்தன. அக்காட்சி குதிரைகளைத் தறியில் வரிசையாகக் கட்டி வைத்திருந்ததைப் போலத் தோன்றியது. அக்காலத்தில் கப்பல்கள் காற்றின் துணைகொண்டே இயங்கின. அவை பாய்மரக்கப்பல்கள் எனப்பட்டன. கப்பலைச் செலுத்துவோருக்கு எந்தப்பருவத்தில் எத்திசை நோக்கிக் காற்று வீசும் என்ற இயற்கையின் இயக்கம் தெரிந்திருந்தது. பண்டைத் தமிழர்கள் பருவநிலைகள் பற்றிய முன்அறிவு (Weather forecast) நிரம்பியவர்கள். இரவில்கூட நாவாய்களைச் செலுத்தும் ஆற்றல் பெற்றிருந்தனர் என்பதை 'நள்ளிருள் யாமத்து நாவாய் ஓட்டி' என்ற தொடர்மூலம் அறிகின்றோம். பூம்புகார்த் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பல்கள், வேகமாக அடித்த அலைகளால் ஆடிக்கொண்டிருந்தன. அக்காட்சி, தறிகளில் கட்டப்பட்டிருந்த யானைகள் அசைவதுபோல இருந்தது. அந்த நாவாய்களின் உச்சியில் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

**பொதி மூட்டைகள்**

பொருட்கள் மூட்டை மூட்டையாகக் கட்டப்பட்டு ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றின்மேலே நாய்களும் ஆட்டுக்கிடாய்களும் ஏறிக்குதித்து விளையாடின. அக்காட்சி, மலைச்சரிவுகளில் வருடைமான்கள் துள்ளி விளையாடுவதைப் போன்று இருந்தது.

*"பொதிமூடைப் போர் ஏறி*
*மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்*
*வரையாடு வருடைத் தோற்றம் போலக்*
*கூருகிர் ஞமலிக் கொடுந்தாள் ஏற்றை*
*ஏழகத் தகரொடு உகளும் முன்றில்"* (மேலது, *137-144)*

எனச் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டுகின்றார் உருத்திரங்கண்ணனார்.

**பண்டங்கள்**

பூம்புகார்த் துறைமுகம் வழியாக ஏற்றுமதி இறக்குமதியான பண்டங்களைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றது பட்டினப்பாலை.

**1. குதிரைகள்**

குதிரைகள் கடல்வழியாகக் கப்பல்களில் வந்து இறங்கின. அவை பாரசீகம், சிந்துதேசம் முதலான நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டன. அக்கால அரசர்கள் நான்கு வகையான படைப்பிரிவுகள் வைத்திருந்தனர். அவற்றுள் குதிரைப்படை இன்றியமையாத பிரிவு. தேசப்படைக்கும் குதிரைகள் தேவை. தனிப் பயணத்திற்கும் வண்டியில் பூட்டி ஓட்டவும் குதிரைகள் பயன்பட்டன. அதனால் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. தமிழ்நாட்டு வாணிகர்கள் குதிரைகளை இலங்கைக்குக் கொண்டு சென்று விற்றார்கள் என்ற குறிப்பு மகாவம்சம் என்ற சிங்கள வரலாற்று நூலுள் காணப்படுகின்றது. கப்பல்களில் குதிரைகளைக் கொண்டு வந்ததை **'நீரின் வந்த நிமிர்பரிப் புரவி'** என்கின்றார் புலவர். குதிரைகள், பல மாதங்கள் கப்பலில் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். கப்பலில் அதற்கெனத் தனி ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டுமல்லவா?

**2. மிளகு மூட்டைகள்:** 'காலின் வந்த கருங்கறிமூடை' என்பதற்குக் காற்றின் உதவியால் கப்பல்களில் கடல்வழியாகக் கொண்டுவந்த மிளகுமூட்டை என்பது பொருள். மேற்குக் கடற்கரையிலிருந்தும் சாவக நாட்டிலிருந்தும் மிளகைக் கொண்டுவந்து இங்கு விற்றார்கள் என்று தெரிகின்றது.

**3. மணியும் பொன்னும்:** வடமலைப் பிறந்த மணியும் பொன்னும் என்பன இமயமலைப் பக்கத்தில் கிடைத்த மணியையும் பொன்னையும் குறிக்கும். அவை வடஇமயத்திலிருந்து கங்கையாற்றின் முகத்துவாரம் வரைப் படகுகளில் கொண்டு வரப்பட்டு, பின்னர் கடல்வழியாகப் பூம்புகார் துறைமுகத்திற்குக் கொண்டுவரப்பட்டவை.

**4. ஆரமும் அகிலும்:** குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும் என்பன மேற்குத்தொடர்ச்சி மலைகளில் வளர்ந்த சந்தன மரங்களும் அகில் மரங்களும் ஆகும். அவை தெய்வங்களுக்கும் அரசர்களுக்கும் மகளிருக்கும் உகந்தவை. வழிபாட்டுக்காகவும் நறுமணத்திற்காகவும் பொலிவுக்காகவும் பயன்படுத்தப் பட்டவை. ஆரமும் அகிலும் சாவக நாட்டிலிருந்து இறக்குமதியாயின என்று மயிலை, சீனி.வேங்கடசாமி கூறுகின்றார். அவை விலையுயர்ந்த நறுமணப் பொருட்கள். அவற்றுக்காகத் தமிழர்கள் தாராளமாகச் செலவு செய்துள்ளனர்.

**5. தென்கடல் முத்து:** பாண்டிய நாட்டுக் குமரி முதலான கடற்பகுதிகளிலிருந்து முத்துக்கள் எடுக்கப்பட்டன. அவற்றுள் உலகப்புகழ் பெற்ற முத்துவகையும் இருந்தது. அதனை எகிப்து நாட்டு அரசிகள் விரும்பி அணிந்து கொண்டனராம்.

**6. குணகடல் துகிர்:** கிழக்குக் கடலில் விளைந்த பவழம்தான் துகிர். பவழம் யவனருக்கு மிகவும் பிடித்தமான வாணிகப்பொருள். அதனை ஏற்றுமதி செய்து தமிழகம் கொழுத்த வருவாய் பெற்றது.

**7. கங்கைவாரி:** இது கங்கையாற்றங்கரையில் விளைந்த பொருட்களைக் குறிக்கும்.

**8. காவிரிப் பயன்:** காவிரியாற்றுப் பாசனத்தில் விளைந்த பொருட்கள் காவிரிப்பயன் ஆயிற்று. இந்த உள்நாட்டு விளைபொருட்கள் ஏற்றுமதிக்காகப் பூம்புகார்த் துறைமுகத்தில் மூட்டை மூட்டையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

**9. ஈழத்து உணவு:** இலங்கையில் விளைந்த உணவுப் பொருட்கள் ஆகும்.

**10. காழகத்து ஆக்கம்:** பர்மாவிலிருந்து கொண்டுவந்த பொருட்கள் ஆகும். அவற்றுக்கெல்லாம் பெயர்கள் சுட்டப்பெறவில்லை. அவற்றோடு தமிழ்நாட்டில் கிடைத்த அரிய பெரிய பொருட்களெல்லாம் ஏற்றுமதிக்குத் தயாராக வைக்கப் பட்டிருந்தன. இக்குறிப்புக்களையெல்லாம் பட்டினப்பாலை,

*"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்*
*காலின் வந்த கருங்கறி மூடையும்*
*வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்*
*குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்*
*தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்*
*கங்கை வாரியும் காவிரிப் பயனும்*
*ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்*
*அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி*
*வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு..."*

என்று பட்டியலிட்டுள்ளது. சீனம் முதலான அயல்நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட கருப்பூரம், பனிநீர், குங்குமம் முதலான மங்கலப் பொருட்கள் காவிரிப்பூம்பட்டினத்தின் கடைத்தெருக்களில் கிடைத்தனவாம். அவை மேட்டுக் குடியினர் பயன்படுத்திய ஆடம்பரப் பொருட்கள்.

இவ்வாறு வாணிகத்தால் புகழ்பெற்றிருந்த காவிரிபூம்பட்டினம் கி.பி.2ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புயற்காற்றாலும் ஆழிப்பேரலையாலும் அழிந்துபோய் விட்டது. இன்று சிற்றூராய்க் காட்சியளிக்கிறது.

**கடைத்தெருக் கொடிகள்**

பட்டினப்பாலையில் திருவிழாக் காலத்தில் ஏற்றப்படும் கொடிகளைப் போலப் பல்வேறு கடைகளிலும் கொடிகளை ஏற்றி வைத்திருந்தனர் என்ற செய்தியும் உள்ளது. பண்டங்களின் விவரங்களை அறியக் கடைகள் தோறும் தனித்தனிக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. பொருட்களை வாங்க வருவோர் வீணே அலையத் தேவையில்லை. இன்ன நிறத்தில் இன்னகொடி கட்டப்பட்டிருந்தால் அங்கு இன்ன பொருள் கிடைக்கும் என்று தெரிந்து கொண்டு அங்குச் சென்று வாங்கிக் கொள்ளலாம். இக்காலத்தில் கடைகளில் வைக்கப்பட்டிருக்கும் விளம்பரப் பலகைகள் போல அவை இருந்தன. அதாவது கூவி அழைக்கவேண்டிய தேவை இல்லாமல் ஒலிமாசு ஏற்படாத வாணிகச் சூழல் நிலவியது.

**கள்ளுக்கடைக் கொடி**

மீனையும் இறைச்சியையும் அறுத்துப்போட்டு நெய்யினால் பொரித்துக் கள்ளுடன் உண்பர் நெய்தல் நிலமக்கள். கள்ளுண்போரை ஈர்க்கும் வகையில் கள்ளுக்கடை வாசலில் கொடிகட்டிப் பறக்கவிட்டிருந்தனர். "இதுதான் பார்

இதுதான் Bar! அரசு மதுக்கடை!" என்று அறிவிப்பதைப் போல இருந்தது அந்த ஏற்பாடு. அன்று அவர்கள் குடித்துவிட்டுக் குற்றம் புரிந்தார்கள் என்ற குறிப்பை எங்கும் காணமுடியவில்லை. பொதுமக்களுக்கு, குறிப்பாக மகளிருக்குத் தொல்லை கொடுத்தார்கள் என்ற செய்திகளும் இல்லை.

**அறிவுப்போட்டிக் கொடி**

பல்வேறு நூல்களையும் முழுமையாகக் கற்றுத்தேர்ந்த சான்றோர் பிறரோடு சொற்போர் நிகழ்த்த அணியமாக இருப்பதற்கு அடையாளமாகக் கட்டி வைக்கப்பட்ட கொடிகளும் பறந்தனவாம். மக்கள் கூடும் இடத்தில் அறிவுப் போட்டியும் (Intellectual tournament) நடைபெற்றது என்பது எவ்வளவு பெரிய அரிய தகவல்! வேறு பல கொடிகளும் பறந்தனவாம்.

**அட்டில் சாலை**

அட்டில் சாலைகள் பல பூம்புகாரில் இருந்தன. அங்கு வடித்துக் கொட்டிய கஞ்சி ஆறுபோலக் கிடந்தது. இதனால் இலவசமாகச் சோறு அளிக்கும் பழக்கம் அன்றே இருந்தது என்ற உண்மையை அறிய முடிகின்றது. அதனால் மக்கள் சோம்பேறிகளாக மாறிவிட்டார்கள் என்றோ, யாரும் வேலைக்குப் போகவில்லை என்றோ நினைக்கவேண்டாம். பொருள்வளம் படைத்தோர் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பினர். அது அவர்களுடைய கொள்கையாக இருந்தது. இன்றுபோல் உணவு விடுதிகள் அன்று இல்லை. வணிக நிமித்தமாகவும் பிறபணிகளுக்காகவும் வந்து செல்வோர்க்கு அட்டில் சாலைகள் அமைத்து உணவு சமைத்து விலையின்றி வழங்கினர்.

**புலி முத்திரை**

பூம்புகார்த் துறைமுகத்தில் பண்டகசாலைகள் இருந்தன. அப்பண்டக சாலைகளில் இறக்குமதிப் பொருட்கள் மீதும் ஏற்றுமதிப் பொருட்கள் மீதும் அரசாங்க அதிகாரிகள் புலிச்சின்னம் பொறித்த முத்திரை இட்டனர். புலி, சோழர்களின் அடையாளச் சின்னம். பண்டக சாலைகளுக்கு நல்ல பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பொருட்கள் களவு போகாமல் இருக்க எந்நேரமும் காவலர் அமர்த்தப்பட்டிருந்தனர். இதனை,

*"அருங்கடிப் பெருங்காப்பின்*
*வலியுடை வல்லணங்கினோன்*
*புலிபொறித்துப் புறம்போக்கி*
*மதிநிறைந்த மலிபண்டம்"* *(133-136)*

என்கின்றது பட்டினப்பாலை.

**சுங்கவரி வாங்குவோர்**

சுங்கவரி வாங்குவோரையும் (Customs Department) காவலரையும் பற்றிய குறிப்பும் பட்டினப்பாலையில் உள்ளது. நள்ளிரவில் கூடத் தூங்காமல், இளைப்பாறாமல் சுங்கவரி வசூலித்தனர் என்கின்றார் நூலாசிரியர். இன்றுபோல அன்று வரிஏய்ப்புச் செய்யமுடியாது போலும்.

**பண்டமாற்று**

பட்டினப்பாலையில் பண்டமாற்று வாணிகம் நடந்ததை அறிகிறோம். ஒரு

பொருளைக் கொடுத்துவிட்டு அதற்கு ஈடாக மற்றொரு பொருளைப் பெறுவது பண்டமாற்று. கடலும் கடல் சார்ந்த இடமுமான பட்டினத்தில் நெல், வரகு முதலான தானியங்கள் விளைய வாய்ப்பில்லை. எனவே நெய்தல் நில மக்கள் மீனையும் உப்பையும் விற்றுப் பண்டமாற்றாகத் தானியங்களைப் பெற்று வந்தனர். துறைமுகப்பட்டினங்களில் வாழ்ந்த பரதவர்களுக்கு ஏற்றுமதி - இறக்குமதி சார்ந்த **வேலை வாய்ப்புகளும்** மிகுதியாக இருந்தன. ஆக, எல்லோருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது.

**நாணயம்/காசுப்புழக்கம்**

பண்டமாற்றோடு அந்தக் காலத்தில் செம்பு, பொன், வெள்ளிக் காசுகளும் புழக்கத்தில் இருந்தன. விலையுயர்ந்த பொருட்களைக் காசு கொடுத்து வாங்கிப் பயன்படுத்தினர். அந்தக்காசுகள் நெல்லிக்காய் போன்ற வடிவத்தில் இருந்தன. நம் நாட்டவர்க்கு அன்றிக் கடல் கடந்து வந்த யவன நாட்டாரிடமும் பொற்காசுகள் புழக்கத்தில் இருந்தன. அவ்வளவு ஏன்? கரிகால் பெருவளத்தான் அவன்மீது பட்டினப்பாலை பாடிய புலவருக்குப் பதினாறு நூறாயிரம் பொன்னைப் பரிசாக வழங்கினான்.

**பொற்குழையும் நெல்மணியும்**

காயவைத்திருந்த நெல்லைத் தின்ன வந்த கோழியை விரட்டுவதற்குத் தம் காதில் அணிந்திருந்த பொற்குழையைக் கழற்றி வீசினராம் மகளிர். வியப்பூட்டும் இச்செய்தி பட்டினப்பாலையில் உள்ளது. இது புனைந்துரைதான் என்றாலும் மக்களின் செல்வச் செழிப்பைக் காட்டுவதற்கு இவ்வாறு கூறப்பட்டது என்று வைத்துக் கொள்ளலாம். ஆயினும் அக்காலத்தில் பொன்விலை நெல்விலையை விடக் குறைவாக இருந்திருக்குமோ என்ற அய்யம் இங்கு எழுகின்றது. காடாக (தரிசாக) இருந்த நிலப்பகுதிகளைச் சீர்படுத்திக் குளம்தொட்டு வளம் பெருக்கி உணவுப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கிக் குடிமக்களை வளமோடு வாழவைத்தான் சோழன். அவற்றை ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை ஈட்டினான் என்பது உண்மை.

**நடுவுநிலை**

எல்லாவற்றுக்கும் மேலாக அன்று நடந்த வாணிகம் அறநெறியின் பாற்பட்டதாய் - நடுவுநிலை சான்றதாய் இருந்தது. வணிகர்கள் தம் பொருளையும் பிறர் பொருளையும் ஒப்ப நினைத்தனர். தாம் கொடுக்கும் பண்டத்தின் மதிப்பைவிட மிகுதியான பொருளைக் கொள்ளமாட்டார்; கொள்ளும் பொருளுக்குக் குறைவான பண்டங்களைக் கொடுக்கவும் மாட்டார்கள். இலாபத்தை வெளிப்படையாகச் சொல்லி விற்பார்கள். நல்லமனம் உடையவராய், பொய் பேசாமல், ஏமாற்றாமல் இடைத்தரகர் இல்லாமல் அன்றைய தமிழர் வாணிகம் செய்தனர். அதனால் வீடும் நாடும் செழிப்பாக இருந்தன. அயல்நாட்டு வாணிகர் பலரும் இங்கு வந்து வாணிகம் செய்தனர்.

வாணிகத்தைத் திறமையாகச் செய்தார்கள்; கடுமையாக உழைத்தார்கள்; பெரிய அளவில் முதலீடு செய்தார்கள் என்பதையெல்லாம்விட **நேர்மையாகச் செய்தார்கள்** என்பதுதான் மிக இன்றியமையாத தகவல் ஆகும். அன்று வணிகர்கள் தராசுக்கோலைப் பயன்படுத்தினர். அதற்கு **ஞெமன்கோல்** என்ற பெயரும் உண்டு. திருவள்ளுவர் 'சமன்செய்து சீர்தூக்கும் கோல்' என்றார். அவர்

வணிகத் தொழிலை, "வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப், பிறவும் தமபோற் செயின்" என்று அறிவுறுத்தினார். நடுவுநிலையான - நேர்மையான - நாணயமான வாணிகமுறை இருந்ததைப் பட்டினப்பாலை அழுத்தமாகப் பதிவு செய்துள்ளது.

**"நெடுநுகத்துப் பகல்போல**
**நடுவுநின்ற நன்னெஞ்சினோர்**
**வடுவஞ்சி வாய்மொழிந்து**
**தமவும் பிறவும் ஒப்பநாடிக்**
**கொள்வதுஉம் மிகைகொளாது கொடுப்பதுஉம் குறைகொடாது**
**பல்பண்டம் பகர்ந்து வீசும்**
**தொல்கொண்டித் துவன்றிருக்கை"** (206-212)

பூம்புகார் வணிகர்கள் **இன்பமும் பொருளும் அறத்தின் வழியே வரவேண்டும்** என்ற கொள்கை படைத்தவர்கள் எனும் பேருண்மையும் இதனால் விளங்குகின்றது.

**பிறநூற் சான்றுகள்**

பட்டினப்பாலை பாடிய உருத்திரங்கண்ணனாரே பெரும்பாணாற்றுப் படையும் பாடினார் என்று இலக்கிய வரலாறு இயம்புகின்றது. பட்டினப்பாலையில் மிளகு மூட்டை பற்றிப் பொதுவாகச் சொல்லியுள்ளார். ஆனால் பெரும்பாணாற்றுப் படையில் அந்த மிளகுமூட்டை பெரிய பலாப்பழத்தின் அளவுக்குப் பொதியாக இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார். அத்துடன் மிளகு மூட்டைகளை ஆண் கழுதைகளின் முதுகில் ஏற்றிக்கொண்டு வாணிகக் குழுக்கள் சென்றனவாம். அதனை,

*"தடவுநிலைப் பலவின் முழுமுதற் கொண்ட*
*சிறுசுளைப் பெரும்பழங் கடுப்ப மிரியல்"*

எனவரும் அடிகளால் அறியலாம். இங்கு மிரியல் என்பதற்கு மிளகு என்று பொருள்.

**இருதரப்பு நல்லிணக்கம்**

திருவிழா நடக்கும் ஊரில் பலநாட்டு மக்களும், பலமொழி பேசுவோரும் வந்து கூடுவதுபோலப் பலநாட்டு வணிகர்களும், பலமொழிகள் பேசுவோரும் புகார்நகரில் கூடி வாழ்ந்தனர். அவர்கள் பூசலின்றி மகிழ்ச்சியாக இருந்தனர். மக்களிடம் அமைதியும் நல்லிணக்கமும் இருந்தால் வாணிகம் செழிக்கும் என்னும் உண்மையினை,

*"சாறு அயர் மூதூர் சென்று தொக்காங்கு*
*மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்*
*புலம்பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும்*
*முட்டாச் சிறப்பின் பட்டினம்"*

என்று பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது.

அயல்நாட்டு வணிகர்கள் பூம்புகாருக்கு வந்து இங்குள்ள தமிழ் வணிகர்களோடு கூடிவாழ்ந்த செய்தியைச் சிலப்பதிகாரத்திலும் காண

முடிகின்றது. வந்தாரை வாழவைத்த தமிழ் நாடாகவே நம்நாடு சித்திரிக்கப் படுகின்றது. தமிழர் அயல்நாட்டில் குடியேறி வாழ்ந்தார்கள் என்ற செய்தி காணப்பெறவில்லை. இளங்கோவடிகள் பூம்புகாரின் பட்டினப்பாக்கத்தை மேட்டுக்குடியினர் பலரும் கூடி வாழ்ந்த நகரமாகக் காட்டுகின்றார். யவனர் வீடுகள் தனியே தெரிந்தனவாம்.

*"பயனற அறியா யவனம் இருக்கையும்*
*கலந்தரு திருவிற் புலம்பெயர் மக்கள்*
*கலந்து இனிது உறையும் இலங்குநீர் வரைப்பு"* *(சிலம்பு.5:10-12)*
*"மொழிபெயர் தேயத்தோர் ஒழியா விளக்கம்"* *(மேலது,5:6-43)*

அயல்மொழி பேசும் வணிகர்கள் இங்குவந்து தொழில் செய்தார்கள் என்றால் அவர்களுக்கு அரசு பாதுகாப்புக் கொடுத்திருக்கும். பொதுவாக நாட்டில் சட்டம், ஒழுங்கு சரியாக இருந்திருக்கும். வெறுப்போ, மொழிக்காழ்ப்போ, மதமோதலோ இல்லாத ஒரு நல்ல அமைதியான சமூகக் கட்டமைப்பு இங்கு இருந்தமையால் வாணிகம் செழித்து இருந்தது. அதுபோல, வேற்றுமொழி பேசும் நாட்டுக்குச் சென்ற தமிழ் வணிகர் தம் தொழிலை அச்சமின்றிச் செய்யமுடிந்தது. இரு தரப்பிலும் நல்லிணக்கம் இருந்ததால் தமிழர்களால் அயலவரும், அயலவர்களால் தமிழர்களும் பயன்பெற்றனர். கொண்டும் கொடுத்தும் நல்லுறவு பாராட்டி வாழ்ந்தனர். அதனால் பன்னாட்டு வாணிகம் செழிப்படைந்தது.

**பாதுகாப்பு**

வாணிகம் செழிக்கப் பொருளும் மூலதனமும் இருந்தால் மட்டும் போதாது. தரைவழி வந்து வாணிகம் செய்தோருக்கு ஆறலைக் கள்வரும், கடல்வழிவந்து வாணிகம் செய்தோருக்குக் கடற்கொள்ளையரும் தொல்லை கொடுத்த செய்திகள் சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ளன. அவர்களிட மிருந்தும் தொல்லை நேராதபடி வணிகர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப் பட்டிருந்ததை உணரமுடிகின்றது.

**பன்மொழித்திறன்**

கடலில் வீசிய புயல்காற்றால் கப்பல் உடைந்து தப்பித்த சாதுவன் கதையை மணிமேகலை கூறுகின்றது. அவன் கரை ஒதுங்கிய நாகநாட்டில் நாகர்களின் மொழியைப் பேசியதால் உயிர் பிழைத்தான் என அறிகின்றோம். அந்த நிகழ்ச்சியிலிருந்து ஓர் உண்மையைத் தெரிந்துகொள்ள முடியும். வாணிகம் செய்வோர் பல மொழிகளையும் நன்றாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பதுதான் அந்த உண்மை. பலமொழியறிவு வாணிக வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியதை அன்றே அறிந்து வைத்திருந்தான் தமிழன் என்பது பெருமைக்குரிய செய்தியாகும். பொதுவாக வணிகர்களுக்கு மொழிக்காழ்ப்பு உணர்வு இருக்காது. வாணிகம் செய்து பொருள் ஈட்டுவதே அவர்களின் முதல் நோக்கம். அதே சமயம், வாணிகம் செய்ய வந்தவர்கள் பிறநாட்டைப் பிடித்து, பிற நாட்டினரை அடிமைப்படுத்தி, அவர் நாட்டுச் செல்வங்களைச் சுரண்டித் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து தங்கள் பொருட்களை விற்கும் சந்தைகளாக மாற்றியதோடும் தங்கள் நாகரிகத்தை அடுத்த நாட்டினர்மீது திணித்த கொடுமையும் அன்று நிகழவில்லை. பன்னாட்டு வாணிக முறையினால்

ஒரு பண்பாட்டுப் படையெடுப்பு நடப்பதையும் அதனால் ஏற்படும் தீமைகளையும் இன்று காணுகின்றோம். இப்படிப்பட்ட சீர்கேடுகள் பட்டினப்பாலை சொல்லிய வாணிகத் தொழிலில் இடம்பெறவே இல்லை. தமிழர்கள் தங்கள் அடையாளமாகிய மொழியையும் பண்பாட்டையும் ஒருபோதும் விட்டுவிடவில்லை. வந்தவர்களும் தங்கள் பண்பாட்டை இழந்துவிடவில்லை. அந்த வகையில் பட்டினப்பாலை கூறும் வணிகத் தொடர்புகள் இன்றைய வாணிக முறைக்கு முன்னோடியாக முன்மாதிரியாக விளங்குகின்றது.

**தரம் நிரந்தரம்**

அன்று விற்கப்பட்ட பொருள்கள் யாவும் தரமாக இருந்தமையால் பொருள்களின் தரம்பற்றி அக்கால மக்கள் கவலைப்படவில்லை. இன்று பொருட்களின் தரம் பற்றிக் கவலைப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. கூடவே விலை உயர்வு பற்றிய அச்சமும் தொற்றிக் கொள்கின்றது. இன்று விளம்பர உத்தியும் பேச்சுத்திறமையும் ஒரு பொருள் விற்பனை அளவை நிர்ணயம் செய்கின்றன. இன்றைய வாணிகத்தில் இலாபம் ஒன்றே குறிக்கோள். விதிவிலக்குகள் இருக்கலாம். அன்றைய வணிகர் நல்ல உள்ளத்தோடு வாணிகம் செய்தனர்; ஆக்கத்தை அடைந்தனர் என்ற பாடத்தை ஏனோ நாம் மறந்துவிட்டோம்? அக்காலத்திய வாணிகத் தொடர்புகளைவிட அவர்களுடைய மனச்சாட்சிதான் நம்மை வியக்கவைக்கின்றது. எப்படி இருந்த நாம் இப்படி ஆகிவிட்டோமே! என்று ஆதங்கப்பட வைக்கின்றது. பட்டினப்பாலை சொல்லிய வாணிகப் பண்பாட்டை மீட்டெடுக்க முடியுமா? பார்ப்போம்! அப்படி மீட்டெடுக்கப் பட்டால் அது உலக வாணிகத்திற்குத் தமிழர் தந்த கொடையாக இருக்கும்.

## வாழ்த்துகிறோம்



செம்மொழித் தமிழ் ஆராய்ச்சிக்காக மதுரை அமெரிக்கன் கல்லூரிப் பேராசிரியர் முனைவர் உல.பாலசுப்ரமணியன் அவர்களுக்கு 2013-2014ஆம் ஆண்டிற்கான குடியரசுத்தலைவரின் இளம் அறிஞர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களை மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம் வாழ்த்துகிறது.

# நற்றிணையில் நீர்வளங்கள்

முனைவர் வீ.காந்திமதி
இணைப்பேராசிரியர் (ஓய்வு)
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

**முன்னுரை**

ஐந்து வகையான பெரிய ஆற்றல்களைக் கொண்டது இயற்கை. நிலம், நீர், தீ, வான், வளி என்னும் ஐந்து இயற்கைக் கூறுகள் கலந்து மயங்கியது உலகம். இவ்வைந்தினையும் சேரமானின் பண்புகளுடன் ஒப்பிட்டுப் பாடுகிறது ஒரு புறநானூற்றுப் பாடல்.[1] சேரமானின் பொறுமைக்கு நிலமும், சூழ்ச்சிக்கு விசும்பும், வலிமைக்கு வளியும், தெறலுக்குத் தீயும், தண்ணளிக்கு நீரும் உவமையாகின்றன. இங்கு இயற்கைப் பாகுபாடுகள் வெறும் இயற்கையாக மட்டும் சொல்லப்படாமல் மானுடப்பண்புகளை எடுத்துரைப்பனவாக உள்ளன. இவ்வமைப்பு முறையில்தான் சங்க இலக்கியப் பாடல்களின் இயற்கைக் காட்சிகள் அக்கால மக்களின் வாழ்வியலோடு இணைந்து விளங்குகின்றன.

*"இயற்கை அரங்கு மனித அரங்கு ஆகிய இரண்டு களங்களே*
*கவிஞனின் தொழிற்சாலைகள் என்கிறார் ஜே.சி.ஷார்ப்"*[2]

வாழ்வியலோடு இணைந்த இயற்கைப் புனைவுகளில் 'நீர்வளங்கள்' பெறும் இடத்தை நற்றிணைப் பாடல்களின் வழி அறிவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஐம்பூதங்களில் நீர்**

ஐம்பூதங்களில் ஒன்றான நீரால் சூழப்பெற்ற உலகம் 'நாமநீர் வைப்பு' என்றழைக்கப்படுகிறது. நிலத்தின் மண்வளம் சிறப்பதற்கு, உயிரினங்கள் உண்பதற்குரிய உணவுப்பொருளை உளவாக்குவதற்கு, தாகம் தீர்ப்பதற்கு, இயற்கைப் பயிர், செடி, கொடி, மரம் வளர்ச்சிக்கு, கடல்நீர் வற்றாமைக்கு, கடவுள் வழிபாடுகளுக்கு 'நீர்' ஆதாரமாக இருப்பதால்,

*"நீரின் றமையா துலகம்"*[3]

என்றார் வள்ளுவர். 'நீர்' இல்லையென்றால் உலகமே இல்லை என்ற உண்மையை உணர்ந்த கபிலர், "நீரின் றமையா உலகம்" (குறி.1) என்று பாடியுள்ளதை நற்றிணையின் முதல்பாடலிலேயே காணமுடிகின்றது.

**மழை**

நிலவுலகின் வெப்பச்சூழல் (தீ) கடல்மேல் பரவி ஆவியாகிறது. மேலெழுந்து செல்லும் நீராவி வானத்தின்கண் கருமேகமாகச் சூழ்ந்து வளி (காற்று) மோதுதலால் மழையாகப் பொழிகின்றது. இவ்வியற்கைச் சுழற்சியை நற்றிணைப் பாடல்கள் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

*"கடல் முகந்த கமஞ்சூழ் மாமழை*
*பொறுத்தல் செல்லாது இறுத்த வண்பெயல்"* (முல்.99)
*"முழங்கி கடல்முகந்த கமஞ்சூல் மாமழை*
*மாதிரம் நனந்தலை புதையப் பாஅய்"* (குறி. 347)

உலகிற்கு 'நீர்' ஆதாரம் என்றால் அந்நீர் மழையாகப் பொழிவதற்கு 'வான்' ஆதாரமாகிறது. இதனை,

"வானின்று அமையாது ஒழுக்கு" [4]

என்ற குறளடியும் நிறுவுகிறது. வானமே மழைநீருக்கு ஆதாரமாக இருப்பதால் 'வான் சிறப்பு' என்ற அதிகாரத்தைப் படைத்துள்ளார் வள்ளுவர்.

மழைநீரை 'உலகிற்கு ஆணி' என்று பாராட்டும் நற்றிணைப் பாடலொன்று மழையைத் தரும் மேகத்தை யாவரும் தொழுது வணங்க வேண்டும் என்று கூறுவதை,

*"உலகிற்கு ஆணியாகப் பலர்தொழ*
*. . . . . . . . . பெருங்கலி எழிலி*
*இரவுப்பெயல் பொழிந்த உதவியோயே"* *(முல். 139)*

என்ற பாடலடிகளில் காணமுடிகின்றது.

வானில் மேகம் சூழ்ந்து பரவியபோது தோன்றுகின்ற இடி, மின்னல், காற்று இவற்றை மழைபெய்யக் காரணமான கருவிகள் என்று சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

*"கருவி மாமழை"* *(144,213,218)*
*"மலை இமைப்பது போல் மின்னி*
*சிலைவாய் ஏற்றொடு செறிந்த இம் மழை"* *(குறி. 112)*
*"செம்புசொரி பானையின் மின்னிஎவ் வாயும்*
*தன்தொழில் வாய்ந்த இன்குரல் எழிலி"* *(பாலை. 153)*

மின்னல், இடி ஆகிய கருவிகளைக் கொண்ட கார்மேகம் வலப்பக்கமாகச் சூழ்ந்தால் பெருமழை பொழியும் என்ற வானியல் ஆய்வு சங்க கால மக்களிடம் இருந்திருக்கிறது என்பதை,

"சிறுபல் கருவித்தாகி வலனேர்பு
பெரும் பெயல்" (குறி. 328)

என்ற பாடலடிகள் நிறுவுகின்றன.

மழைநீர் மட்டுமல்லாமல் கடல் நீர், அருவி, கான்யாறு, சுனை, ஊற்று ஆகிய இயற்கையாய் அமைந்த நீர்நிலைகளும்; பொய்கை, குளம், கயம், ஏரி, ஆறு ஆகிய செயற்கையாய் அமைத்த நீர் நிலைகளும் உயிர்வாழ்வதற்கும், வளம் பெறுவதற்கும் ஆதாரமாய் அமைவன.

'நீரின்றியமையா உடல் உணவால் அமைவது. உணவு கொடுத்தவர் உயிர் கொடுத்தவர் ஆவர். உணவு என்பது நிலத்தொடு நீரும் ஆகும். விதைகளை விதைத்துவிட்டு மழையை எதிர்பார்த்திருக்கும் நிலை ஏற்பட்டால், அகன்ற இடமுடைய பெரிய நிலமாயினும் அது புன் செய்யாக ஆகும். இப்புன் நிலம், ஆளும் அரசனது முயற்சிக்கு உதவாது. புன்செய்யை நன்செய்யாக மாற்றுவதே அரசனின் கடமையாகும். அதனால் அரசனானவன், நிலத்தின் குழிந்த இடந்தோறும் நீர்நிலைகளைப் பெருகச் செய்தல் வேண்டும். அவ்வாறு நிலத்தோடு நீரைக் கட்டியவர் நிலவுலகம் உள்ளவரை தன் பெயரை

நிலைநிறுத்துவர்.'' இவ்வாறு பாண்டிய மன்னனுக்குக் கூறிய அறிவுரையாய் அமைந்த இப்புறப்பாடல், 'நீர்நிலைகள்' உயிர்வாழ்வதற்கு ஆதாரங்களா கின்றன என்ற உண்மையை உணர்த்துகிறது.

**நீர்நிலைகள்:**

**அருவி:**

"ஒளிறு வெள்ளருவி" (65), "ஒலிவெள்ளருவி" (77), "நெடுநீர் அருவி" (251), "கல்லிழி அருவி" (107) என்றவாறு குறிக்கப்பெற்ற அருவி, மேகமானது கடலிடத்துச் சென்று நீரை முகந்துகொண்டு வந்து வீழ்வதால்,

*"மாக்கடல் முகந்து மணிநிறத்து அருவி" (112)*

என்று கூறப்படுகிறது. தேனிறால்கள் தொங்கும் உயர்ந்த மலையிலிருந்து ஆரவாரத்துடன் வீழும் அருவி (நற். குறி. 396) தேனருவி ஆகிறது. மேகம் சூழ்ந்த மலை திருமாலைப் போலக் கருமையாகவும், வீழ்கின்ற அருவி பலதேவனைப் போல வெண்மையாகவும் காட்சியளிப்பதை,

*"மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்*
*வாலியோன் அன்ன வயங்கு வெள்ளருவி" (குறி.32)*

இவ்வடிகளில் காணலாம்.

**சுனை:**

மலைப் பாறைகளுக்கிடையே சிறுசிறு பள்ளங்களில் தேங்கியுள்ள நீர் 'சுனை நீர்' எனப்படுகிறது. நற்றிணைப் பாடல்களில் சுனையில் பூத்திருக்கும் குவளைமலர், பெண்களின் கண்களுக்கு உவமையாகிறது. மேலும் குறிஞ்சி மகளிர் சுனைகளில் நீராடுவதாகப் பாடல்கள் உள்ளன.

*"முதுநீர் இலஞ்சி பூத்த குவளை" (குறி. 160)*

ஈண்டு 'இலஞ்சி' என்பது சுனையைக் குறிப்பது. இக்காலத்தில் இலஞ்சி என்ற ஊர் தமிழ்நாட்டில் இருக்கிறது.

**ஆறு:**

நீண்டதாகவும் அகன்றதாகவும் தோண்டப்பெற்று இருகரைகளைக் கொண்டதாய் விளங்குவது ஆறு. அதனால் தான்,

"யாறு கிடந்தன்ன அகல்நெடுந் தெரு" (மரு. 200)

என்றவாறு நீண்ட தெருவிற்கு ஆறு உவமையாகிறது. முல்லை நிலத்தில் செல்லுகின்ற ஆற்றின் இருகரைகளிலும் கருவிளையும், காந்தளும் மலர்ந்துள்ளன. பொற்காசினைக் கோர்த்து வரிசையாகத் தொங்கவிட்டாற் போன்று சரக்கொன்றை மலர்கள் தொங்குகின்றன. நீரால் அழகுபெற்றதாக "நீரணிப் பெருவழி" (முல்.221) என்றமைந்த தொடர் காட்டுமலர்கள் சூழ்ந்திருக்க இடையே ஓடும் ஆற்றின் அழகினைக் காணும் பேரின்பத்தை நல்குகிறது.

இமய மலை உச்சியிலிருந்து அருவியாய் வீழ்ந்து ஆறாகப் பாய்ந்து கரைகடந்து இழிதரும் கங்கையாறு (நெய்.396) பற்றிய பாடலொன்று காணப்படுகிறது.

**கயம், பொய்கை, குளம்**

கயம், பொய்கை, குளம் என்பன சொல்லால் வேறுபட்டாலும் ஒரே பொருளைக் கொண்டன.

மலையினிடையே மரங்கள் சூழப்பெற்றதால், பச்சை நிறமாகத் தோற்றமளிக்கும் குளத்தை, "குளவித் தண்கயம்" (நற்.குறி.232) என்று குறிக்கிறது ஒரு பாடல். (குளவி - மலைப்பச்சை).

யானையின் காதுகளைப் போன்ற பசிய இலைகள், கொக்கின் மூக்கினைப் போன்ற கூம்பு மொட்டுகள், விடிவெள்ளியைப் போல் மலரும் ஆம்பல் மலர்கள், மீன்கூட்டம் ஆகியவை நிறைந்து காணப்படும் பொய்கை (நற்.மருதம்.230) அகக்கண்ணுக்கு விருந்தாகக் காட்சியளிக்கிறது.

**கிணறு**

பாலை நிலத்துச் சிற்றூரின்கண் அகன்ற சுற்றளவுடைய கிணறு,

*"வேட்டச் சீறூர் அகன்கண் கேணி"* *(பாலை. 92)*

என்ற பாடலடியில் குறிக்கப்பட்டுள்ளது.

**கடல்**

'கடல்' நெய்தல் திணையின் முதற்பொருள் என்பதால் கடலையும் கடல்சூழ்ந்த பரப்பையும் இணைத்தே புலவர்கள் பாடியுள்ளனர்.

நீலமணி போன்ற தெளிந்த நீரால் சூழப்பெற்ற கடற்பரப்பு, அக்கடலில் வலிமைமிக்கதாய் மோதுகின்ற அலைகள் குவித்து ஓங்கிய மணல்மேடு, வலம்புரிச் சங்குகளைக் குலையாகத் தொகுத்தது போன்று வெண்குருகுகளின் கூட்டம், அக்குருகுகளை ஒவ்வொன்றாக எண்ணிக் கொண்டிருக்கிற தலைவி. இப்படிக் கடற்பரப்பு விரிவதை, நெய்தல்திணைப் பாடல் (159) காட்டுகிறது.

நீர்வாழ் உயிரினங்களில் அலவன், ஞெண்டு என்னும் பெயர்களில் நண்டு குறிக்கப்பட்டுள்ளது.

தவளை (பாலை.41), முதலை (குறி.288), நீர்நாய் (மரு.390), சிப்பி (நெய்.87) கிளிஞ்சல் (நெய்.175) ஆகிய உயிரினங்களும் பாடல்களில் பாடப்பட்டுள்ளன.

**நீர்நிலைத் தொழில்கள்**

சங்ககாலத்தில் வேளாண்மையும், கைவினைத் தொழில்களும், வணிகமும் கைகோர்த்து வளர்ந்தன. மற்றைத் தொழில்களிலும் உணவுப் பொருளை உளவாக்குகின்ற காரணத்தால் வேளாண்மைத் தொழில் சிறந்ததாகிறது. உழவு சிறக்க வேண்டும் என்றால் மழை பெய்ய வேண்டும். இல்லையெனில் உழவுத் தொழில் நடைபெறாது.

*"இருங்கண் ஞாலத்து ஈண்டுதொழில் உதவிப்*
*பெரும்பெயல் பொழிந்த"* *(பாலை. 157)*

இவ்வுலகில் தொழில் சிறக்க உதவிய மழையைப் பாராட்டுகின்றது இப்பாடல் அடி. நீர்நிலைத் தொழில்களின் வழி அந்நில வளங்களும் பாடல்களில் பதிவாகியுள்ளன.

**திணை முதலான கூலம்**

*"வரைவெள் ளருவி மாலையின் இழிதரக்*
*கூலம் எல்லாம் புலம்புக"* *(குறி.93)*

இவ்வடிகளில் ‘கூலம் எல்லாம்’ என்பது 16 வகைத் தானியங்களைக் குறிக்கிறது.

மலைப் பகுதியில் பெய்த மழையினால், சிலவாக விதைத்த தினைவித்து பலவாக விளைந்ததை (குறி.213, 209, 328) குறிஞ்சிப்பாடல்கள் பகர்கின்றன.

**உழவு**

மலை கண்டன்ன உயர்ச்சி மிக்க நெற்கூடுகளையும், எருமை மாடுகளையும் சொந்தமாகக் கொண்ட உழவன் அவன். விடியற்காலத்தே வரால்மீனின் பெரிய துண்டங்கள் மிளிரும் குழம்பினை விட்டுக் கலந்த அரிசிச் சோற்றை உண்ணும் கைகளை உடையவன். உண்டபின்னர் உழத்தியருடன் நாற்றினை நடுதற்குச் செல்கின்ற காட்சியை (மரு.60) மருதத் திணைப் பாடல் காட்டுகிறது.

இப்பாட்டில் நாற்றுநடுதல், எருமைகளைக் கொண்டு சூடு அடித்தல் ஆகிய உழவுத் தொழிலும், உயர்ந்த நெற்கூடு, மீன் குழம்புடன் கூடிய அரிசிச்சோறு (வைக்கோல் எருமையின் உணவு, சோறு உழவனின் உணவு) ஆகிய வளங்களும் விவரிக்கப் பட்டுள்ளன.

வயலில் செழித்து வளர்ந்த நெற்கதிர் அருகே உள்ள வாழைக்குலையின் நுனியில் தொங்கும் பூவை அசைக்கின்றது. அறுவடை செய்த நெற்சூடு, அதன்மேல் வாளைமீன் பிறழ்கிறது (மரு.400).

நெல் அறுவடைக்குப் பின்னரும் ஈரம் புலராத சேற்று வயலில் விதைகளை விதைக்கும் பொருட்டுக் கடகப் பெட்டியில் நெல்விதையைக் கொண்டு சென்று, விதைத்த பின்னர் பற்பலவான மீனொடு திரும்பச் செல்லுதலைக் (மரு.210) காட்டுகிறது ஒரு பாடல்.

**மேய்த்தல் தொழில்**

பால்விலை கூறும் தொழிலை உடைய இடையன், மேய்த்தல் தொழிலுக்குச் செல்லும்போது, உறி, தீக்கடைகோல் முதலான கருவிகளைப் பனை ஓலைப் பாயுடன் சேர்த்துக் கட்டி அதனை முதுகில் சுமந்து சென்று, ஆட்டு மந்தையை வயலில் மேயவிட்டு நின்றான். அப்போது பெய்த மழைத்திவலைகள் அவனுடம்பினை நனைத்தன. தன் கையில் வைத்திருந்த கோலை ஊன்றியவனாய் ஒடுங்கி நின்று நாவை மடித்து ஒலி எழுப்பினான். அவ்வொலியைக் கேட்டு மேய்ந்து கொண்டிருந்த ஆட்டுக் கூட்டம் வேறிடங்கட்குச் செல்லாமல் ஓரிடத்திலேயே தங்கி நின்றது. (முல்.142)

இடையரது தொழிலைக் கூறும் இப்பாடலில், மழைபெய்யும் போது நிகழ்ந்த நிகழ்ச்சி இடம்பெறுகிறது. மேய்கின்ற இடத்தை விட்டு அகலாது, ஆட்டுக் கூட்டத்தை ஓர் எல்லைக்குள் நிறுத்தி வைத்துக் ‘கிடைபோடும்’ வழக்கம் இக்காலத்திலும் காணப்படுகிறது.

**தொடர்ச்சி அடுத்த இதழில்**

# சங்கச் செய்திகள்

## வ.சுப.மாணிக்கனார் நூற்றாண்டு விழா

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரியில் வ.சுப.மாணிக்கனார் நூற்றாண்டு விழா 24.06.2016 அன்று காலை 11 மணியளவில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் வழக்கறிஞர் திரு.ச.மாரியப்பமுரளி அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்று பொதுப் பணத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தி எளிமைக்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்தவர் வ.சுப.மாணிக்கனார் என மொழிந்தார்.

தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு உறுப்பினர் பொறியாளர் திரு.க.சி.அகமுடை நம்பி தனது நினைவுரையில் வள்ளுவர் வழியில் வாழ்ந்தவர் மாணிக்கனார் என்றார். மூதறிஞரின் படைப்புகள் பற்றிய நினைவுகளைச் செந்தமிழ் இதழின் ஆசிரியர் இரா.சதாசிவம் அவர்கள் எடுத்துரைத்தார்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் மேனாள் துணை முதல்வர் முனைவர் பீ.மு.மன்சூர் அவர்கள் வ.சுப.மாணிக்கனாரின் தலைமை மாணாக்கர் தான் என்று கூறி அவரது வாழ்க்கையில் அவரோடு நெருங்கிப் பழகி தான் அறிந்து கொண்ட செய்திகளைச் சிறப்பாக எடுத்துரைத்தார்.

சிறப்புரை நிகழ்த்திய முதுமுனைவர் பெரும்புலவர். இரா.இளங்குமரனார் அவர்கள் வாய்மை, தூய்மை, எளிமை, நிறைமை என்ற நான்கு தூண்கள் தாங்கிய மாடம் வ.சுப.மாணிக்கனார் என்று அவரது தமிழ்த் தொண்டு குறித்து மாணவர்களுக்கு விரிவாக எடுத்துக் கூறினார்.

முன்னதாக கல்லூரி முதல்வர் முனைவர் சு.விஜயன் அவர்கள் வரவேற்றார். கல்லூரியின் துணை முதல்வர் கி.வேணுகா நன்றியுரை கூறினார். பேராசிரியர்கள், மாணவர்கள், தமிழார்வலர்கள் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மதுரை நான்காம் தமிழ்ச்சங்க வளாகத்தில் 28.06.2016 அன்று முற்பகல் பேராசிரியர் பதிப்புச்செம்மல் ச.மெய்யப்பனார் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு சிறப்பாக நடைப்பெற்றது. அன்னாரது தமிழ்த்தொண்டு, பதிப்புப்பணி குறித்து கல்லூரி முதல்வர் முனைவர் சு.விஜயன், இளங்கலை மூன்றாமாண்டு மாணவிகள் ஜெ.செல்வராணி, பா.ஸ்ரீதேவி ஆகியோர் மாணாக்கர்களுக்கு எடுத்துரைத்தார்கள். பேராசிரியர்களும் கல்லூரி மரணவ மாணவிகளும் திரளாகக் கலந்துக்கொண்டு அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மதுரை நான்காம் தமிழ்ச்சங்க வளாகத்தில் 30.06.2016 அன்று முற்பகல் படைப்பாளர்கள் (கோ)விந்தன், புதுமைப்பித்தன் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. இவ்விருபடைப்பாளர்களின் படைப்புகள் குறித்து துணைமுதல்வர் முனைவர் கி.வேணுகா, இளம் இலக்கியம் மூன்றாமாண்டு மாணவிகள் தெ.பொன்அமிர்தவள்ளி, மொ.கஜோல்பிரசன்னா ஆகியோர் மாணாக்கர்களுக்கு எடுத்துரைத்தார்கள். பேராசிரியர்களும் கல்லூரி மாணவ மாணவிகளும் திரளாகக் கலந்துக்கொண்டு அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

05.06.2016ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத்தின் பொதுக்குழுக்கூட்டம் மாட்சிமை தங்கிய முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் மற்றும் செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரியின் கல்லூரிக்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

## நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

## ஆட்சிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| முகவை மன்னர் நா.குமரன்சேதுபதி | தலைவர் |
| மருத்துவர் ந.சேதுராமன் | துணைத் தலைவர் |
| வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி | செயலாளர் |
| திருமதி. இராணி லட்சுமி குமரன் சேதுபதி | உறுப்பினர் |
| முதுமுனைவர் இரா.இளங்குமரனார் | உறுப்பினர் |
| பொறியாளர் க.சி.அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் | உறுப்பினர் |
| வழக்குரைஞர் கே.ஆர்.என்.கருணாகரன் | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| திரு. வி.சத்யநாராயணன் | உறுப்பினர் |
| திரு. துரை கருணாநிதி | உறுப்பினர் |
| வழக்குரைஞர் ச.தசரதராமன் | உறுப்பினர் |

## செந்தமிழ்க் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள் பட்டியல் 2016-2019

| | |
|---|---|
| வழக்குரைஞர் ச.தசரதராமன் | தலைவர் |
| திருமதி. இராணி லட்சுமி குமரன் சேதுபதி | செயலாளர் |
| வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி | உறுப்பினர் |
| திரு. த.மாயராசன் | உறுப்பினர் |
| திரு.சிவசாமி | உறுப்பினர் |
| பொறியாளர் க.சி.அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. எல்.சிவக்குமார் | உறுப்பினர் |
| திரு. ஆர்.பாலாஜி | உறுப்பினர் |
| திரு. ஜெ.பாலதண்டாயுதம் | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| திரு. வி.சத்யநாராயணன் | உறுப்பினர் |

## முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு வரவேற்பு விழா

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வரவேற்பு மற்றும் ஆற்றுப்படுத்துதல் நிகழ்ச்சி 23.06.2016 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரியின் செயலாளர் இராணி ந.லட்சுமி குமரன் சேதுபதி அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்று மாணவர்களின் நலனுக்காக எத்தகைய வசதிகள் கேட்டாலும் நிருவாகத்தில் செய்து கொடுப்போம் என்றும், மாணவர்கள் சிறப்பாகப் பயின்று முன்னுக்கு வர வேண்டும் என்றும் வாழ்த்தினார். முன்னிலை வகித்த தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் வழக்கறிஞர் ச.மாரியப்ப முரளி அவர்கள் கல்லூரியின் வரலாற்றையும் தமிழ்ச்சங்கத்தின் வரலாற்றையும் நோக்கத்தையும் எடுத்துக்கூறி செந்தமிழ்க் கல்லூரியில் பயின்ற மாணவர்கள் சமூகத்தில் பல்வேறு உயர்ந்த பொறுப்புகளில் இருக்கிறார்கள் என்ற செய்தியினை மாணவர்களுக்குக் கூறி ஊக்கப்படுத்தினார்.

இந்நிகழ்வில் மதுரை தியாகராசர் கல்லூரியின் தமிழ்த் துறைத்தலைவர் முனைவர் இ.பேச்சிமுத்து அவர்கள் கலந்து கொண்டார். தனது சிறப்புரையில் தமிழைச் சரியாக உணர்ந்து படிக்க வேண்டும்; வாழ்க்கையை நலமுடன் வாழ தமிழ்மொழி பயன்படும், வழிகாட்டும் என்றும், இலக்கியம் படிப்பவர்களும், இலக்கியம் படைத்தவர்களும் தான் கால வெள்ளத்தில் நிலைத்து நிற்க முடியும். தமிழ்ப் படிப்பு என்பதை எளிய படிப்பாக நினைக்காமல், எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதைப் புரிந்து படிக்கவேண்டும் என்றும் வாசிப்பின் முக்கியத்துவத்தையும், அதனை அனைத்து மாணவர்களும் தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற எடுத்துக் கூறினார்.

முன்னதாக கல்லூரியின் முதல்வர் முனைவர் சு.விஜயன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கல்லூரியின் துணை முதல்வர் கி.வேணுகா அவர்கள் நன்றியுரை கூறினார். பேராசிரியர்கள், பெற்றோர்கள், வாழ்த்துரை வழங்கினார்கள். முதலாம் ஆண்டு மாணவர்களும், பெற்றோர்களும் திரளாகக் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தார்கள்.

| இதழ்க்கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 200 | ரூ. 1,000 |
| ஆயுள்கட்டணம் | ரூ. 2,000 | ரூ. 10,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 10,000 | ரூ. 20,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ. 10 | |

## ஜூலை திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்



கு.அழகிரிசாமி
(ஜூலை 5)



மயிலை சிவமுத்து
(ஜூலை 6)



இரா.இராகவையங்கார்
(ஜூலை 16)



சுவாமி விபுலானந்தா
(ஜூலை 19)



வேதநாயகம் பிள்ளை
(ஜூலை 21)



சுப்ரமணிய சிவா
(ஜூலை 23)


பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

### ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரன்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **இராமசுந்தரம்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **முருகரத்தனம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5508/56 December 2014 MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month



# செந்தமிழ்க் கல்லூரி

## நான்காம் தமிழ்ச்சங்கம், மதுரை

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி: 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் சு.விஜயன்**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
**செயலாளர்**
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கம் சாலை,
மதுரை - 625 001.

From
**THE SECRETARY**
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001,TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L.,செயலாளர்
54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: **இரா.சதாசிவம்**, 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: **ஜெயஸ்ரீ கிராபிக்ஸ்**, காமராஜர்சாலை, மதுரை-625 009.